# முடியரசன் தமிழ் வழிபாடு




தொகுப்பாசிரியர்

**மு.பாரி**



“பிள்ளைக் கலிதனைத் தீர்க்கவந்தாய் - அன்புப்
பெட்டக மேஇன்பம் சேர்க்க வந்தாய்
உள்ளக் கவலைகள் ஓட்டவந்தாய் - என்றன்
ஓவிய மேபுகழ்க் காவியமே”

“பெற்றெடுத்த தாய்தந்தை பேர்காக்கும் மைந்தர்களைப்
பெற்ற குடும்பந்தான் பேறுபெற்ற நற்குடும்பம்;
ஆதலினால் குடும்பமது சுவையால் நெஞ்சை
அள்ளுமொரு காவியமென் றறைதல் சாலும்;
காவியத்தைக் காத்திடுக வாழ்வீர் நன்றே”

“பூமருவு மணமாலை பூண்டு நெஞ்சுட்
புகுந்திருவர் ஒருவரென ஆகி நின்றார்
தாமரையும் மணமுமென இல்ல றத்தில்
தாமிணைத்தோர் அணிகலனாய் விளங்கி நின்றார்”

- கவியரசர் முடியரசனார்

# நன்றிக்குவிப்பு

எங்கள் இனிய செல்வங்கள்

**பா. ஓவியா,** M.E . - **இ. விவேக்,** M.S. (London)

மணவிழாவிற்கு
வந்து வாழ்த்திச் சிறப்பித்தமைக்கு
எங்களின் மனங்கனிந்த
நன்றி! நன்றி!!

அன்புடன்
**பா. பூங்கோதை - மு. பாரி**

வள்ளுவராண்டு 2042 மடங்கல் (ஆவணி) 15
(01-09-2011)
காரைக்குடி.

# முடியரசன்
# தமிழ் வழிபாடு

தொகுப்பாசிரியர்

**மு. பாரி**

**கவியரசர் முடியரசன் அவைக்களம்**
17, பூங்கொடி வீதி,
569, சூடாமணிபுரம்,
காரைக்குடி - 630 003.

வண்ணலை அச்சகம், காரைக்குடி. ✆ 235315

# முன்னுரை

கவியரசர் முடியரசனார் கவிதைகள் தாய்மொழியுணர்ச்சி, தமிழின எழுச்சி, தமிழகத்து வளர்ச்சி, சாதியொழிப்பு, சமூகப்புரட்சி, பகுத்தறிவூட்டல், பொது உடைமை நாட்டல், சமஉரிமை பேணல், மாந்தநேயம் காணல், மக்கள் நலம் நாடல் ஆகியவற்றையே பிரதிபலிக்கும். ஆனால் அவை அனைத்திலும் தமிழுணர்வே தலைதூக்கியிருக்கும், முடியரசனாரின் தமிழ் வாழ்த்துக் கவிதைகளை நோக்குங்கால், கவிஞர் நாத்திகரா? ஆத்திகரா? எனும் வினாக்கீற்று, மனத்துள் தோன்றி மறையும். ஏனெனில், அவர் தமிழை நேசித்த விதம் அப்படி!

கவிஞரின் மறைவின் பொழுது, தினமணி (5–12–98) நாளிதழில் 'பாடிப் பறந்த பறவை' எனும் முடியரசனார் பற்றிய கட்டுரையில், ''தமிழ் அவரது உயிர். எமக்குத் தெரிந்தவரை தமிழை இத்துணை நேசித்த ஒருவரையாம் இதுவரை கண்டதில்லை'' என்று முனைவர்.தமிழண்ணல் குறிப்பிட்டுள்ளதிலிருந்து கவியரசர் முடியரசனாரின் தமிழ்ப் பத்திமையை உணரலாம்.

தமிழைத் தாயாக, தந்தையாக, காதலியாக, மனைவியாக, மகனாக மட்டுமன்றித் தெய்வமாகவும் உருவகப் படுத்திக் கனிந்துருகிக் கவிஞர் பாடிய பாடல்களைத் தொகுத்து இத்தொகுப்பில் தந்துள்ளேன். கவிஞரின் பல்வேறு கவிதை நூல்களிலிருந்து எடுக்கப்பட்டவை இவை. நூலின் பெயரை, ஒவ்வொரு பாடலின் கீழும் அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ளேன்.

எத்துணையோ இடர்ப்பாடுகள் இன்னல்கள், வறுமை நிலை – அவரைத் தாக்கிய பொழுதும், எக்கடவுளையும் அவர் வேண்டி யாசிக்கவில்லை.

**இடர்பல சூழ்ந்த போதும்**
**என்னுடல் தளர்ந்த போதும்**
**மிடியெனைத் தின்ற போதும்**
**விழியொளி குறைந்த போதும்**
**கடமையில் தவறேன் அம்மா**
**கனிந்துனைப் பாடிப் பாடி**
**இடுபணி புரித லன்றி**
**இனியெனக் கென்ன வேலை?**

என்று தமிழையே பாடிக் கசிந்துருகினார். வணங்கா முடியரசராக வாழ்ந்த அவர்,

**''வாளால் பிளப்பினும் வாழ்நாள் இழப்பினும் வஞ்சமனக்
கேளார் குழுமிக் கெடுதிகள் சூழினும் பூமியில்வாழ்
நாளெலாம் வாட்டும் நலிவே உறினும் நற்றமிழே
ஆளாதல் திண்ணம் அடியேன் நினது மலரடிக்கே''**

என்று அன்னைத் தமிழுக்கு மட்டுமே தலைவணங்கினார்.

''இறைவழிபாடு தமிழில்தான் வேண்டும்'' எனத் தமிழர் குரல் ஓங்கி ஒலிக்கும் இக்காலகட்டத்தில், இந்நூலில் இடம் பெற்றுள்ள பாடல்கள் அதற்குத் தக்கவையாகும். தமிழியக்கத்தின் இன்னொரு படைக்கலனாக இந்நூலைத் தமிழன்பர்கள் கைக்கொள்வாராக.

தாய்த் தமிழைப் போற்றிப் புரப்பதன் வழி, தமிழை வழிபாட்டு மொழியாக மட்டுமன்றி, பல்துறைப் பயன்பாட்டு மொழியாக்கி, பயிற்றுமொழியாக்கி, அறிவியல் மொழியாக்கி, அறமன்ற, ஆட்சிமொழியாக்கி, அன்னைத் தமிழை அரியணை ஏற்றி நல்வாழ்வு பெறுவோமாக.

முடியரசன் குடில்,
காரைக்குடி.

அன்பன்,
**மு.பாரி**

**"கவியரசு முடியரசன் தமக்கெனத் தனிப்பாணி வகுத்துக் கொண்டு, கவிதையே மூச்சாக வாழ்ந்தவர். அவருக்கு அது ஒரு தொழிலாக மட்டுமன்று; உயிர் மூச்சாகவே இயங்கி வந்தது. தமிழ் அவரது உயிர். எமக்குத் தெரிந்தவரை தமிழை இத்துணை நேசித்த ஒருவரை யாம் இதுவரை கண்டதில்லை என்போம். அதனால் தமிழ் உள்ள அளவும் வாழ்வு பெறும் கவிதைகளை அவர் தந்து சென்றுள்ளார்."**

– முனைவர் தமிழண்ணல்

(கவிஞரின் மறைவினையொட்டி, தினமணி (05.12.1998) நாளிதழில், முனைவர் தமிழண்ணல் எழுதிய 'பாடிப் பறந்த பறவை' எனும் கட்டுரையிலிருந்து.)

# புகழ் மலர்கள்

கவிஞன் யார்? ..... என்பதற்கு எடுத்துக்காட்டுத்தானய்யா. பகுத்தறிவுக் கவிஞர் முடியரசன்

-தந்தை பெரியார்

திராவிடநாட்டின் வானம்பாடி கவிஞர் முடியரசன் .

-பேறிஞர் அண்ணா

தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிக்கின்ற
மான் துள்ளும் வேகத்தைக் கவிதையினால்
வான்பெய்யும் கோடைமழைபோலப் பொழிகின்ற முடியரசர்
முன்னாள் தொட்டு இந்நாள்வரை இருக்கின்ற நம்கவியரசர்.

தன்மானக்குன்றம் - கொள்கை மாறாச் சிங்கம் - திராவிட இயக்கத்தின் முன்னோடிக் கவிஞர் - திராவிட இயக்கத்தின் ஈடு இணையற்ற தளகர்த்தர்களில் ஒருவர் - 1940க்குப் பின்னால் திராவிட இயக்கத்தின் சார்பில் நாற்பதுக்கும் மேற்பட்ட இதழ்களில் கொள்கை முழக்கம் செய்தவர் கவிஞர் முடியரசன். அதிலும் குறிப்பாக முரசொலியிலும், முத்தாரத்திலும் அவர் கவிதை இடம் பொறாத நாளே இருக்கமுடியாது. இன்று திராவிட இயக்கம் நிமிர்ந்து நின்று கோலோச்சுகிறதென்றால்... அன்று முடியரசனார் ஆற்றிய இலக்கியப் பணியும் காரணம்.

-தலைவர் கலைஞர்

கவிஞர் என்றால் இப்படித்தான் வாழவேண்டும் என்று முடியரசனார் அவர்களின் வாழ்கையைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

- மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.

பாரதியார் என்ற வித்திலிருந்து முளைத்தது பாரதிதாசன் என்ற செடி. அச்செடியில் தழைத்தது முடியரசன் என்ற கொடி.

புரட்சிக் கவிஞர் பரம்பரையில் புத்துலக உணர்வு படைக்கும் பகுத்தறிவுச் சிந்தனைகளை வடிப்பதில் தேர்ந்தவர் கவிஞர் முடியரசனார். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா வழியில் தன்மானச் சுடராகத் திகழ்ந்தவர். அவர் இயற்றிய கவிதை நூல்கள் ஒவ்வொன்றும் தமிழுக்கு ஆக்கம் செய்யும் செம்மொழிச் செல்வமாகும். கவிஞர்களிடையே ஓர் முடிசூடா மன்னராகத்திகழ்த்தவர் கவியரசர் முடியரசனார்.

பேராசிரியர் க.அன்பழகன்

என் மூத்த வழித்தோன்றல் முடியரசனே...
எனக்குப்பிறகு கவிஞன் ..... முடியரசன் .....

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

இருபதாம் நூற்றாண்டின் இலக்கியவாதிகளுள் இணையற்றவர் கவியரசர் முடியரசனார்.

-முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்

சாதி ஒழிய வேண்டும் எனக் கவிதையிலும், மேடையிலும் முழங்கிய கவிஞர்களுள், அவற்றைத்தன் வாழ்வில் கடைப்பிடித்தவர் கவிஞர் முடியரசனார் தவிர வேறு யாராவது இருக்கிறார்களா? எனத் தெரியவில்லை.

-தவத்திரு குன்றக்குடி அடிகளார்

வேத்தவைப் பாவலரும் வேற்று மொழிகலக்குந்
தீத்திறக் காலை தெளி மருந்தே - மூத்த
முடியரச ரின்றி மொழிவனப்புச் செய்யும்
முடியரசன் செய்யுண் முறை.

-மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்

பாடப் பிறந்த பழஞ்சபை மாணவன்
மூடப் பழக்கஞ் சாடிய பாவலன்....
இலக்கியம் நிலமா இலக்கணம் அரணாக்
கவிதை கோலாக் கற்பனை கொடியா
வெல்க தமிழெனும் விறற்கொடி பொறியா
யாப்புப் படையா நல்லணி துணையாப்
புரட்சி முரசாப் புதுமை துடியாத்
தமிழை இகழ்வார் தன்னுயிர்ப் பகையா
அல்மொழி திணிப்பார் வல்வர வெதிர்த்துத்
தொடுமொழிப் போரில் தும்பை சூடியோன்
மொழியர சோச்சும் முதல்முடி யரசன்
குடியரசு போற்றுங் கொள்கை யோனே

-முனைவர் வ.சுப.மாணிக்கனார்

முடியரசர் இவரென்றால் மக்க ளெங்கே?
முன்னோடும் பரி எங்கே? படைக ளெங்கே?
முடிஎங்கே? அரசெங்கே? முரச மெங்கே?
முத்தமிழில் ஒரு தமிழ்தான் முடியோ மற்ற
இடைத்தமிழ்தான் அரசோ! மூன் றாவதான
எழிற்றமிழ்தான் முரசோ! ஓ சரிதான் இந்த
முடியரசர் பாவரசர் பாடுகின்றார் நாம்
முழங்காலை நிலந்தாழ்த்தி வணங்கிக் கேட்போம்!

மும்முடியை ஓர்தலையில் முடித்த முடியரசர்
எம்முடியும் தலைவணங்கும் இயற்கையிலே கவிஞர்
தம்மரிய கவிதையினால் கவியரசர் ஆனார்
தாய்த்தமிழே அவர்முடியை உனக்குத்தான் சாய்ப்பார்.

-கவிஞர் **கண்ணதாசன்**

வளையாத முடியரசன் வைரத் தூண்தான்!
வளமார்ந்த பெரியாரின் கொள்கை வாள்தான்!
தளையறுத்து தமிழ்ப்பகையின் தலை யறுக்கும்
தளைதட்டா வெண்பாக்கள் இவரின் தோட்டா
குலைஇளநீர் கொட்டியதாய் இனிமைப் பேச்சு
'குடி'யறியாச் சிந்தனைகள் தமிழே மூச்சு
அலைகடலாய் கருத்துமனம் பெரியார் அண்ணா
ஆழ்மனத்தில் வைத்திருந்த புதையல் காடு

எவரெவரோ எழுதுகின்றார் இவரைப் போன்றே
எழுந்தவர்யார் எழுத்தாலே? பாவேந் தர்தம்
தவப்புதல்வர் தமிழ்ப்புலவர் இவரின் பாட்டு
தன்மான இயக்கத்தின் தளர்தா லாட்டு
யுகப்புரட்சி எழுத்தாளா தமிழர் கைக்கு
உயிர்நூற்கள் படைப்பாளா உன்றன் தொண்டை
அகங்குளிர நினைக்கின்றேன்! உருவம் கூட
அகலவில்லை! அடடாநீ எங்கே போனாய்?

**–உவமைக் கவிஞர் சுரதா**

கொட்டிக் கொடுத்தாலும் கோமான்கள் அழைத்தாலும்
எட்டியே பார்க்காத இளம்போத்துச் சிங்கமாய்
அட்டியின்றி பணத்தாசை அணுவளவும் இல்லாமல்
சுட்டி உரைக்கும் சுடர்க்கவியாய் கவியுலகில்
பாடிப்பறந்த பறவையாம் கவியரசர் முடியரசர்.

-தமிழாகரர் தெ. முருகசாமி

கவிஞரின் மறைவிற்காகத் 'தினமணி' [05-12-1998] நாளிதழ் 'புதுமை பூத்த மரபுக் கவிஞர்' எனும் தலைப்பில் தீட்டிய அஞ்சலித் தலையங்கம்

இறைவனின் படைப்புகளில் சிகரம் போன்றவன் மனிதன். மனிதனின் படைப்புகளில் சிகரம் மொழி; மொழியின் சிகரம் கவிதை. அது மொழியின் பூரணப் பொலிவும் கூட. தமிழ் இலக்கியம் நீண்ட மரபுடையது. மரபு வழுவாமல், புதுமைகளைப் புகுத்தி, தற்காலத் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்திய பெருமை மகாகவி பாரதியார் – பாவேந்தர் பாரதிதாசன் கவிதா மண்டலத்துக்கே உண்டு. இக்கவிதா மண்டலத்தைச் சேர்ந்த புதிய தலைமுறைக் கவிஞர்களில் முதலாவது இடத்தைப் பெற்றவர் கவிஞர் முடியரசன். ''எனது மூத்த வழித்தோன்றல் முடியரசனே'' என்று பாவேந்தராலேயே பாராட்டப் பெற்ற பெருமையுடையவர். ஆழ்ந்த புலமைமிக்க இக் கவிஞர் அழகும் இனிமையும் புதுமையும் கொஞ்சிக் குலவும் ஏராளமான கவிதைகளை எளிய நடையில் இயற்றித் தமிழுக்குப் புதிய அணிகலன்களைச் சூட்டியவர்.

பொதுவாக கவிஞர்களின் உள்ளம் தனித்தன்மை வாய்ந்தது. பார்வையும் தனி – கோணமும் தனி – உணர்வும் தனி – எல்லாமே தனி. அதனாலேயே, தனித்து நின்று இலக்கிய உலகுக்கு தனி முத்திரை பதிந்த கவிதைகளைக் கவிஞனால் வழங்க முடிகிறது. இலக்கியவாதிகளில் பத்தோடு பதினொன்றாகக் கவிஞனைக் கருதமுடியாது. இலக்கிய உலகில் சிங்கம் போல உலவக் கூடியவர்கள் உண்மையான கவிஞர்கள். அந்த அபூர்வ இனத்தைச் சேர்ந்த கவிஞர் முடியரசன் எந்தச் சபலத்துக்கும் முடிசாய்க்காத ஆண்மையாளர். தமது கவிதைகள் மூலம் சமூக அநீதிகளை மனிதரிடையே பேதாபேதங்களைக் கற்பிக்கும் ஏற்பாடுகளை–குருட்டுப் பழக்க வழக்கங்களைச் சாடியவர். மனிதநேயத்துக்கும் சமத்துவத்துக்கும் எதிரான கருத்துகளை எதிர்த்து கவிதைகள் மூலம் ஓயாத அறிவுப்போர் நடத்தியவர். ஒப்புரவும் மனிதநேயமுமே தமிழரின் பண்பாடு என்பதைக் கவிதைகளால் முரசறைந்தவர். 'அரசவைக் கவிஞர்' என்ற பதவி மட்டும் இருந்திருக்குமானால் அதில் அமர்ந்து தமிழ் மொழிக்குப் பெருமை சேர்ப்பதற்கான தகுதிகள் அனைத்தும் உடையவர். அவருடைய மறைவின் மூலம் தமிழ் உலகம் ஓர் அபூர்வப் படைப்பாளியை இழந்து விட்டது. மரபு வழுவாமல், அதே சமயத்தில் புதுமை பூத்த இனிய கவிதைகளைச் சொரிந்து வந்த தமிழ்ப் பொழில் மறைந்துவிட்டது. அதிலும் உரைநடைக்கே கவிதைபோல வேடமிட்டுக் காட்டும் 'நவீன கவிஞர்கள்' மலிந்துவரும் இக்காலத்தில் தரம்மிக்க மரபுக்கவிதைகளைக் காலத்தின் தேவைகளுக்கு ஈடுசெய்யக்கூடிய வகையில் சுரந்து அளித்துவந்த செந்தமிழ் ஊற்று முடியரசன். தமிழுக்கு வளம் சேர்த்த அறிஞர்களின் படைப்புகளை அரசுடைமை ஆக்கும் சீரிய திட்டம் ஒன்றைத் தமிழக அரசு செயற்படுத்தி வருகிறது. அந்த வரிசையில் கவிஞர் முடியரசனின் படைப்புகளையும் அரசுடைமையாக்கிச் சிறப்பிப்பதன் மூலம் இந்த அற்புதக் கவிஞனுக்குத் தமிழ் மக்களின் உணர்வுபூர்வமான அஞ்சலியைப் பிரதிபலிக்க முடியும்.

---

குறிப்பு : தமிழ்நாட்டரசால் கவிஞரின் நூல்கள் 2000ஆம் ஆண்டில் அரசுடைமை ஆக்கப்பட்டன.

# கவியரசர் முடியரசன்–வாழ்க்கைக் குறிப்பு (1920–1998)

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | துரைராசு |
| பெற்றோர் | : | சுப்புராயலு-சீதாலெட்சுமி |
| பிறந்த ஊர் | : | பெரியகுளம் |
| வாழ்ந்த ஊர் | : | காரைக்குடி |
| தோற்றம் | : | 07.10.1920 |
| இயற்கையடைவு | : | 03.12.1998 |
| கல்வி | : | பிரவேச பண்டிதம், மதுரைத் தமிழ்ச் சங்கம் (1934-39)<br>வித்துவான், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி (1939-43) |
| பணி | : | தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை (1947-49)<br>மீ.சு.உயர்நிலைப்பள்ளி, காரைக்குடி (1949-78) |
| திருமணம் | : | 2.2.1949<br>(கொள்கை வழிச் சாதிமறுப்புத் திருமணம்) |
| துணைவியார் | : | கலைச்செல்வி |

| **மக்கள்** | | **மருமக்கள்** | | **பெயரப்பிள்ளைகள்** |
|---|---|---|---|---|
| குமுதம் | + | பாண்டியன் | = | திருப்பாவை |
| பாரி | + | பூங்கோதை | = | ஓவியம் |
| அன்னம் | + | சற்குணம் | = | செழியன், இனியன் |
| குமணன் | + | தேன்மொழி | = | அமுதன், யாழிசை |
| செல்வம் | + | சுசீலா | = | கலைக்கோ, வெண்ணிலா |
| அல்லி | + | பாண்டியன் | = | முகிலன் |

## இயற்றிய நூல்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | முடியரசன் கவிதைகள் | (கவிதைத் தொகுதி) | ..... | 1954 |
| 2. | காவியப் பாவை | (கவிதைத் தொகுதி) | ..... | 1955 |
| 3. | கவியரங்கில் முடியரசன் | (கவிதைத் தொகுதி) | ..... | 1960 |
| 4. | பாடுங்குயில் | (கவிதைத் தொகுதி) | ..... | 1983 |
| 5. | நெஞ்சு பொறுக்கவில்லையே | (கவிதைத் தொகுதி) | ..... | 1985 |
| 6. | மனிதனைத் தேடுகிறேன் | (கவிதைத் தொகுதி) | ..... | 1986 |
| 7. | தமிழ் முழக்கம் | (கவிதைத் தொகுதி) | ..... | 1999 |
| 8. | நெஞ்சிற் பூத்தவை | (கவிதைத் தொகுதி) | ..... | 1999 |
| 9. | ஞாயிறும் திங்களும் | (கவிதைத் தொகுதி) | ..... | 1999 |
| 10. | வள்ளுவர் கோட்டம் | (கவிதைத் தொகுதி) | ..... | 1999 |
| 11. | புதியதொரு விதி செய்வோம் | (கவிதைத் தொகுதி) | ..... | 1999 |
| 12. | தாய்மொழி காப்போம் | (கவிதைத் தொகுதி) | ..... | 2001 |
| 13. | மனிதரைக் கண்டுகொண்டேன் | (கவிதைத் தொகுதி) | ..... | 2005 |
| 14. | பூங்கொடி | (காப்பியம்) | ..... | 1964 |
| 15. | வீரகாவியம் | (காப்பியம்) | ..... | 1970 |
| 16. | ஊன்றுகோல் | (காப்பியம்) | ..... | 1983 |
| 17. | இளம்பெருவழுதி | (நாடகக் காப்பியம்) | ..... | 2008 |
| 18. | அன்புள்ள பாண்டியனுக்கு | (கடித இலக்கியம்) | ..... | 1999 |
| 19. | இளவரசனுக்கு | (கடித இலக்கியம்) | ..... | 1999 |
| 20. | எக்கோவின் காதல் | (சிறு கதைகள்) | ..... | 1999 |
| 21. | முடியரசன் தமிழ் இலக்கணம் | (இலக்கணம்) | ..... | 1967 |
| 22. | எப்படி வளரும் தமிழ் | (கட்டுரைத் தொகுதி) | ..... | 2001 |
| 23. | பாடுங்குயில்கள் | (கட்டுரைத் தொகுதி) | ..... | 1975 |
| 24. | சீர்திருத்தச் செம்மல் வை.சு. சண்முகனார் | (கட்டுரைத் தொகுதி) | ..... | 1990 |
| 25. | பாட்டுப் பறவையின் வாழ்க்கைப்பயணம் | (தன் வரலாறு) | ..... | 2008 |

## தேடிவந்த சிறப்புகள்

(விருது,பட்டம்,பரிசு,-வழங்கியவர்,இடம்-ஆண்டு)

- 'அழகின் சிரிப்பு' என்ற கவிதைக்கு முதல் பரிசு-பாவேந்தர் பாரதிதாசன், முத்தமிழ் மாநாடு, கோவை-1950
- 'திராவிட நாட்டின் வானம்பாடி' பட்டம்-பேரறிஞர் அண்ணா-1957
- 'கவியரசு' பட்டம், 'பொற்பதக்கம்'-குன்றக்குடி அடிகளார், பாரி விழா, பறம்புமலை -1966
- 'முடியரசன் கவிதைகள்' நூலுக்குப் பரிசு - தமிழ்நாடு அரசு - 1966
- 'வீரகாவியம்' நூலுக்குப் பரிசு-தமிழ்நாடு அரசு-1973
- 'நல்லாசிரியர் விருது' பதக்கம்-கே.கே.சா, ஆளுநர், தமிழ்நாடு அரசு - 1974
- 'சங்கப் புலவர்' பட்டம் - குன்றக்குடி அடிகளார் - 1974
- 'பாவரசர்' பட்டம், 'பொற்பேழை' - மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர், உலகத் தமிழ்க் கழகம், பெங்களூர்-1979
- 'பொற்கிழி'-பாவாணர் தமிழ்க் குடும்பம், நெய்வேலி-1979
- 'பொற்குவை'-ரூ10,000-'மணிவிழா' எடுப்பு-கவிஞரின் மாணாக்கர்கள், காரைக்குடி-1979
- 'பொற்கிழி'-பாரதியார் நூற்றாண்டு விழாக் குழு, சிவகங்கை
- 'கவிப்பேரரசர்' பட்டம் 'பொற்கிழி' ரூ.10,000-மணிவிழா எடுப்பு கலைஞர் மு.கருணாநிதி, தி.மு.க மாநில இலக்கிய அணி, சென்னை-1980
- 'தமிழ்ச் சான்றோர்' விருது, பதக்கம் - தமிழகப் புலவர் குழு, சேலம் - 1983
- 'கலைஞர் விருது'-என்.டி.இராமாராவ் (ஆந்திர முன்னாள் முதல்வர்) கலைஞர் மு. கருணாநிதி, தி.மு.க முப்பெரும் விழா, தேசிய முன்னணித் தொடக்கவிழா சென்னை-1988
- 'பாவேந்தர் விருது' (1987க்குரியது) பொற்பதக்கம்-கலைஞர் மு. கருணாநிதி, முதல்வர், தமிழ்நாடு அரசு, சென்னை-1989
- 'பொற்கிழி'-விக்கிரமன், அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர், காரைக்குடி கவிஞர் இல்லம்-1993.
- 'பூங்கொடி' நூலுக்கு 'இந்திராணி இலக்கியப் பரிசு' ரூ.5,000- இந்திராணி அறக்கட்டளை, கரூர்-1993
- சிறந்த தமிழ்த் தொண்டிற்கான 'அரசர் முத்தையவேள் நினைவுப் பரிசில்', வெள்ளிப்பேழை, பொற்குவை ரூ.50,000- அண்ணாமலை அரசர் நினைவு அறக்கட்டளை, சென்னை-1993

- 'இரண்டாம் புரட்சிக் கவிஞர்' எனும் பட்டம் மற்றும் 'இராணா இலக்கிய விருது' பொற்குவை ரூ.10,000-தமிழ் இலக்கியப் பேரவை, ஈரோடு-1984
- 'கல்வி உலகக் கவியரசு' விருது-அகில இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், அழகப்பா பல்கலைக் கழகம் காரைக்குடி-1996
- 'பொற்கிழி'-பழைய மாணவர் பாராட்டு விழா, கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி-1997
- 'கலைமாமணி விருது' 'பொற்பதக்கம்'-செல்வி பாத்திமா பீவி, ஆளுநர்-கலைஞர் மு.கருணாநதி, முதல்வர், தமிழ்நாடு அரசு, சென்னை-1998

## பிற குறிப்புகள்

- இளம் பருவத்தில் இலக்கிய உணர்வை ஊட்டியவர் தாய்மாமன் துரைசாமி அவர்கள்.
- 20ஆம் அகவை வரைக் கடவுளைப் பற்றிய கவிதைகள் இயற்றினார். அவை கிடைத்தில.(1939)
- 21ஆம் அகவை முதல் சமுதாயச் சூழல், மொழி, நாடு, இயற்கை இவற்றையே பாடினார். (1940)
- 21ஆம் அகவையில் இயற்றிய 'சாதி என்பது நமக்கு ஏனோ?' என்ற கவிதையே முதல்முதலில் அச்சு வாகனம் ஏறியது. இது பேரறிஞர் அண்ணாவால் 'திராவிட நாடு' இதழில் வெளியிடப்பட்டது. (1940)
- தந்தை பெரியாரின் தன்மான இயக்கத் தொடர்பு (1940)
- தன்மான இயக்கத் தொடர்பால் 'வித்துவான்' தேர்வில் தோல்வியுறுமாறு செய்யப்பட்டார். (1943)
- நவாபு டி.எஸ்.இராசமாணிக்கம் நாடகக் குழுவில் பாடல், உரையாடல் எழுதும் பணி. அங்கிருந்த சிறை வாழ்க்கையும், மதவழிபாட்டு முறைகளும் பிடிக்காமல் வெளியேறினார். (1944)
- பெரியார் தலைமையில் அண்ணா முன்னிலையில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில், மாநாட்டுத் தீர்மானம் முன் மொழிந்தார். அன்பழகன் வழிமொழிந்தார். மாநாட்டில் அறிஞர் அண்ணாவுடன் முதல் நேரடிச் சந்திப்பு. (1945)
- புதுவை மாநிலத்திற்கு அருகில் உள்ள மயிலத்தில் தலைமறைவாக இருந்து படித்து 'வித்துவான்' பட்டம் பெற்றார். (1947)
- சென்னையில் தமிழாசிரியர் பணி-பல்வேறு இதழ்களில் இலக்கியப் பணி-'பொன்னி' இதழில் 'பாரதிதாசன் பரம்பரைக் கவிஞராக' அறிமுகம்-திராவிட இயக்கத்தலைவர்கள், தமிழறிஞர்களுடன் தொடர்பு (1947-49)
- தான் கொண்ட கொள்கைக்காகக் கைம்பெண்-சாதி மறுப்புத் திருமணம் செய்துகொள்ள தாயாரிடம் வேண்டுதல், ஒரே மகன் என்பதால், இசைவு தரத் தாயார் மறுத்தல் (1948)

- 'சாதி மறுப்புத் திருமணம் செய்யவாவது இசைவு கொடுங்கள்' என அன்னையாரிடம் வேண்டுதல். பெற்றோர் இசைதல். பெற்றோர் ஏற்பாட்டில் 'கலைச்செல்வி' எனும் நலத்தகையாரை பேராசிரியர் மயிலை சிவமுத்து தலைமையில் சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டார். (1949)
- திருமணமான ஆண்டே துணைவியாருடன் இந்தி எதிர்ப்புப் போரில் பங்கேற்றார் (1949)
- சாதி மறுப்பு மணத்தின் தேவையைப் பற்றிக் கவிதை பல பாடியதோடு இருந்துவிடாமல் தாமும் சாதி மறுப்புத் திருமணம் செய்துகொண்டு, தம் பிள்ளைகள் அனைவருக்கும் அவ்வாறே செய்துவித்துத் தம் கொள்கைக்கு வெற்றி தேடித்தந்ததன் மூலம் 'அரியவாம் சொல்லிய வண்ணம் செயல் என்னும் வள்ளுவன் வாக்கைத் தோல்வியுறச் செய்தார்.
- காரைக்குடியில் மீ.சு.உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியர் பணியேற்றார். (1949)
- 'என் மூத்த வழித்தோன்றல் முடியரசனே' எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனால் பாராட்டப் பெற்றார். (1950)
- குருதி உமிழும் கொடுநோய்க்கு இலக்காகி, புதுக்கோட்டைத் தமிழ்ப் புரவலர் அண்ணல் பு.அ.சுப்பிரமணியனார் அருட்கொடையால் உயிர்பிழைத்தார். (1955)
- மூன்றவாது மகவான ஆண் மகவு பிறத்தல், செய்நன்றியின் பொருட்டு, தன்னுயிர் காத்த 'அண்ணல் சுப்பிரமணியனார்' நினைவாக அம்மகனுக்கு 'சுப்பிரமணியன்' எனப் பெயரிட்டார். (1955)
- 'சுப்பிரமணியன்' என்ற அம்மகன் மறைவு. கவிஞர் பெருந்துயரம் அடைதல். (1959)
- சென்னை சென்று திரைப்படத்துறையில் ஈடுபட்டார். 'கண்ணாடி மாளிகை' என்ற திரைப்படத்திற்கு பாடல், உரையாடல் எழுதினார். திரைத்துறையில் சிறுமைகளைக்கண்டு வெறுப்புற்று தம் இயல்புக்கும், கொள்கைக்கும், அத்தொழில் சிறிதும் ஒத்து வராததால் திரைத்துறையிலிருந்து வெளியேறினார் (1961)
- மீண்டும் காரைக்குடியில் தமிழாசிரியர் பணி (1962)
- இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டதாகக் காவல் துறையினர் வழக்கு (1965)
- 'பூங்கொடி' நூலுக்குத் தமிழ்நாடு அரசு தடைசெய்ய ஏற்பாடு (1966).
  ஆட்சிமாற்றத்தால் 'பூங்கொடி' தடை ஏற்பாடு விலக்கம் (1967)
  மகள் குமுதம் திருமணம் (1975).
  தமிழாசிரியப் பணி ஓய்வு (1978).
  மகள் அன்னம் திருமணம் (1979).
  மகன் பாரி திருமணம் (1983)
- மதுரைப் பல்கலைக் கழகம், தமிழியற் புலத்தில் நாடகக் காப்பியப் பணி (1985)

- மகன் குமணன் திருமணம் (1991)
  மகன் செல்வம் திருமணம் (1992)
  மகள் அல்லி திருமணம் (1995)
- திராவிட நாடு, முரசொலி, முத்தாரம், குடியரசு, விடுதலை, திராவிடன், திருநாடு, போர்வாள், முல்லை, எழில், தென்றல், மன்றம், அழகு, முருகு, பொன்னி, குயில், கதிரவன், நம்நாடு, வாரச்செய்தி, பிரசண்ட விகடன், தமிழ்ப்பாவை, காதல், தாமரை, புதுவாழ்வு, தனியரசு, சங்கொலி, வாழ்வு, தோழன், மாலைமணி, திராவிடமணி, தமிழ்ச்சுவை, தமிழ், போர்முரசு, பாசறை, இன முரசு, இன முழக்கம், நித்திலக் குவியல், செந்தமிழ்ச்செல்வி, கலைக்கதிர், அமுத சுரபி, கழகக் குரல், மறவன் மடல், சமநீதி, உரிமை வேட்கை, தென்னரசு, தென்னகம், தமிழ் முரசு, தமிழ்நாடு, அலை ஓசை, தமிழ்நேசன் (மலேசியா) கவிதை, முல்லைச்சரம், தமிழரசு, குங்குமம், தினமணி, தினமணி கதிர் உட்படப் பல்வேறு இதழ்களில் கவிஞர் எழுத்தோவியங்களைத் தீட்டியுள்ளார்.
- கவிஞரின் பல கவிதைகள் 'சாகித்திய அகாதமி'யால் இந்திய மொழிகளிலும், ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. உருசிய மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.
- கவிஞரின் நூல்கள் பல்கலைக்கழகங்கள் மற்றும் பள்ளிகளில் பாடநூல்களாக வைக்கப்பட்டுள்ளன.
- கவிஞரின் நூல்கள் குறித்துப்பலர், பல்வேறு பல்கலைக்கழகங்களில் ஆய்வேடுகள் அளித்து, முனைவர் (பிஎச்.டி) மற்றும் இளமுனைவர் (எம்.பிஃல்) பட்டங்கள் பெற்றுள்ளனர்.
- கவிஞரின் படைப்புகள் பற்றிப் பல ஆய்வு நூல்களும், கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. கவிஞர் பற்றி பல்வேறு இதழ்கள் சிறப்பிதழ்கள் வெளியிட்டுள்ளன.
- கவிஞரின் படைப்புகள் தமிழ்நாட்டரசால் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன (2000)
- 'இந்திய இலக்கியச் சிற்பிகள்' எனும் வரிசையில் 'முடியரசன்' வாழ்க்கை வரலாற்றை, சாகித்திய அகாடமி வெளியிட்டுள்ளது (2005)
- 'கவியரசர் முடியரசன் அவைக்களம்.' 'கவியரசர் முடியரசனார் முத்தமிழ் மன்றம்' 'கவிஞர் முடியரசன் இலக்கிய மன்றம்' எனும் அமைப்புகள், முறையே காரைக்குடி, ஈரோடு, குடந்தை ஆகிய ஊர்களில் தமிழ்த் தொண்டு ஆற்றி வருகின்றன.
- காரைக்குடியில் ஒரு பெரிய நெடுஞ்சாலைக்கு 'கவியரசர் முடியரசன் சாலை' எனக் காரைக்குடி நகராட்சி மன்றம் பெயர் சூட்டிச் சிறப்பித்துள்ளது.

## பெற்ற பாராட்டுகள்

பாவேந்தர் வழித்தோன்றல், புதுமைக் கவிஞர், கவி மாமன்னர், கவிச்சிங்கம், இருபதாம் நூற்றாண்டின் இமயக் கவிஞர், கவிதை இமயம், தமிழ்த்தவம் கொண்ட தலைமைக் கவிஞர், தமிழ்த் தேசியக் கவிஞர், தமிழ்க் குடியரசின் கவிமுடியரசர், கவியுலக முடியரசர், தன்மானக் கவிஞர், தமிழுசைப் பாவலர், மரபின் மைந்தர்.

வள்ளுவர் நெறியில் வாழ்ந்தவர், வாய்மைச் சொல்லினர், சொல்லும் செயலும் ஒத்த வாழ்வினர், வறுமையிலும் செம்மை போற்றியவர், திமிர்ந்த ஞானச்செருக்குடைய சங்கப் புலவரனையர், சங்கத்தமிழனைய தூயவர், பீடுநடையினர், பெருமித வாழ்வினர், நிமிர்ந்த நன்னடையினர், நேர் கொண்ட பார்வையர், அண்டிப்பிழையார், ஆர்த்தவாழ்வினர், ஒட்டார் பின் செல்லாதவர், நல்லாசிரியர், ஆசான் போற்றுபவர், நன்றி மறவாதவர், நட்புப்பெரிதென வாழ்ந்தவர், பகுத்தறிவாளர், மனிதநேயர், பழகுதற்கினிய பண்பாளர், பிறர்க்குதவும் ஏந்தல், சாதி தொலைத்தவர், சமயம் கடந்தவர், பதவி வெறுத்தவர், சமத்துவம் விரும்பி, விளம்பரம் விரும்பார், எளிமை வாழ்வினர், புகழ்கண்டு கூசுவார், அன்பு நெஞ்சினர், குழந்தை உள்ளத்தினர், பூமனத்தினர், இனிமைப் பேச்சினர், இளமை விரும்பி, அமைதி வாழ்வினர், குறிக்கோள் வாழ்வினர்.

இடர்ப்பாடுகளும், இன்னல்களும் வந்தபோதும் கொண்ட கொள்கையிலிருந்து இறுதிவரை வழுவாமல், தடம்புரளாத் தங்கமாக, தன்மானச் சிங்கமாக, தமிழ் வேழமாக, கொள்கைக் குன்றமாக வாழ்ந்தவர், பணம், பதவி, பட்டம், பகட்டுக்குப் பணியாமலும், அரசவைப் பதவிகள் நாடி வந்தபோதும் அவற்றைப் புறக்கணித்தும் ‘வளையா முடியரசர்’ என்றும், வணங்கா முடியரசர் என்றும் புகழ்பெற்றவர். தன்மானக் கொள்கையால் மைய, மாநில அரசின் அரிய பல விருதுகளை இழந்தவர். பல்லாயிரம் இளைஞர்களைத் தமிழ் வீறும், வேட்கையும் பெறச் செய்தவர் கனவிலும் கவிதை பாடுபவர். பாட்டுலகில் பாரதியாரைப் பாட்டனாகவும், பாரதிதாசனைத் தந்தையாகவும் கருதிக் குலமுறை கிளத்தும் கொள்கையுடையவர்.

**தம் வாழ்நாளில் இறுதியாக அவர் இயற்றிய கவிதை :-**

**வாளால் பிளப்பினும் வாழ்நாள் இழப்பினும் வஞ்சமனக்**
**கேளார் குழுமிக் கெடுதிகள் சூழினும் பூமியில்வாழ்**
**நாளெலாம் வாட்டும் நலிவே உறினும் நற்றமிழே**
**ஆளாதல் திண்ணம் அடியேன் நினது மலரடிக்கே.**

## உள்ளுறை

1. தாயே உயிரே
2. அருள்வாய் அம்மா
3. ஆட்கொள் செல்வீ
4. பாட வா! வா!
5. அன்னாய் நன்றே
6. முதன்மைத் தமிழே!
7. நந்தா விளக்கே
8. எற்குதவுவையே
9. நல்குன் அருள்
10. பெருமை பூண்டாள்
11. வணங்குகின்றேன்
12. செந்தமிழ்த்தாயே
13. நினைவோம் உனையே
14. உயிர்த்தமிழே
15. தேனிசை பாடுவென்
16. வல்லமை தந்தருள்வாய்
17. எங்கள் தாயே
18. தொன்மைத் தாயே
19. தாள் பணிந்தேன்
20. உலகைக் காக்கின்றாள்
21. தெய்வத் திருமகளே
22. போற்றி! போற்றி!
23. தமிழன்னை பிள்ளைத் தமிழ்
24. செந்தமிழ்ச் செல்வி
25. தாயே போற்றி
26. நானொரு குழந்தை
27. என்றும் பிறப்பேன்
28. தமிழுக்கு என்னைத் தருவேன்
29. ஏங்குதல் நீதியோ
30. மறந்தறியேன்
31. தமிழ் பாடத் தடையா

32. பாடிக் கொண்டேயிருப்பேன்
33. பற்றுகள் இல்லேன்
34. இனியெனக் கென்ன வேலை
35. அன்னாய் வாழ்க
36. தோளும் வலியும் துணை
37. நினது மலரடிக்கே
38. வாழ்த்தி நிற்பேன்
39. நீயின்றி நானில்லை
40. தமிழே வா
41. வெறிவேண்டும்
42. தமிழ் - என் காதலி
43. தமிழ் - என் மனைவி
44. தமிழ் - என் மகன்
45. தமிழ் - என் தாய்
46. தமிழ் - என் தந்தை
47. தமிழ் - என் தெய்வம்
48. சொற்றமிழ் பாடுக

# 1. தாயே உயிரே

தாயே உயிரே தமிழே நினைவணங்கும்
சேயேன் பெறற்கரிய செல்வமே - நீயே
தலைநின்றாய் இவ்வுலகில் தாள்பணிந்தேன் நீயிங்
கிலையென்றால் இன்பமெனக் கேது.

பாவால் தொழுதேத்திப் பாரில் நினையுயர்த்தும்
ஓவாப் பணிசெய்ய உன்னுகின்றேன் - நாவாழும்
மூவா முதலே முழுமைபெறும் செம்பொருளே
சாவா வரமெனக்குத் தா.

தென்பால் உகந்தாளும் தெய்வத் திருமகளே
என்பால் அரும்பி எழுமுணர்வை - அன்பால்
தொடுத்தே அணிதிகழச் சூட்டினேன் பாவாய்
அடிக்கே எனையாண் டருள்.

(பூங்கொடி)

# 2. அருள்வாய் அம்மா

செந்தமிழே என்னுயிரே புலவர் நெஞ்சில்
சேர்ந்தாடும் எழில்மயிலே என்னுட் பொங்கி
உந்திவரும் உணர்வதனால் கூவிக் கூவி
உவகைதரும் பூங்குயிலே மொழிக்கு லத்தில்
முந்திவரும் தெய்வதமே என்னைச் சூழ்ந்து
மொய்த்துவரும் துன்பமெலாம் நீக்கி யின்பம்
தந்துவரும் ஆரணங்கே அன்பே நின்றன்
தாள்வணங்கி நிற்கின்றேன் அருள்வாய் அம்மா.

(பாடுங்குயில்)

## 3. ஆட்கொள் செல்வீ

அகம்மலர்த்தும் செந்தமிழே! உயிரே! மெய்யே!
அகிலத்து மொழிமுதலே! அன்பே! பண்பே!
புகல்கொடுத்துச் சிறியேனை ஆட்கொள் செல்வீ!
பொழுதெல்லாம் களிப்பருளும் தெய்வத் தாயே!
பகைதவிர்த்துத் தமிழ்பாடும் என்றன் நாவால்
பாரறிய தாயுன்றன் புகழு ரைக்க
வகைவகுத்த சொற்பொருளால் அணியால் ஆன்ற
வளமிக்க கவிவெறிஎன் நெஞ்சில் ஏற்று!

[கவியரங்கில் முடியரசன்]

---

உயிரே மெய்யே : உயிரும் மெய்யும் போன்ற தமிழே,
உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் ஆகிய தமிழே,

புகல் : தஞ்சம்

ஆன்ற : நிறைந்த

## 4. பாட வா! வா!

முழுமதியே! செந்தமிழே! காலங் கண்டும்
மூவாத மலர்ப்பொழிலில் ஆடி வந்த
அழகொழுகும் இளமயிலே உலக மாந்தர்
அகமனைத்தும் குளிர்விக்கும் தென்றற் காற்றே!
பழகுசுவைக் கனிமூன்றும் சுவைத்துப் பார்த்துப்
பாடிவரும் பூங்குயிலே! எனது நெஞ்சில்
அழகுதவழ் தோகைவிரித் தாட வாவா!
அவ்வரங்கில் குரலெடுத்துப் பாட வாவா!

(மனிதரைக் கண்டுகொண்டேன்)

## 5. அன்னாய் நன்றே

மலரனைய திருவடியில் சிலம்ப ணிந்து
 மணியொளிரும் மேகலையை இடைக்க ணிந்து
பலர்புகழ்சிந் தாமணியை மார்பிற் பூண்டு
 பார்புரக்கும் திருக்குறளே செங்கோ லாகக்
குலவுபுகழ்த் தூதுமுதல் தொண்ணூற் றாறு
 குறுநூல்கள் பணிந்துநின தேவல் செய்ய
நலமுயர்நற் றொகைநூல்கள் ஆயம் ஆக
 நன்கமைதொல் காப்பியமாம் கட்டில் ஏறி

பாவலர்தம் நெஞ்செமெலாம் ஆட்சி செய்யும்
 பைந்தமிழே நின்வாயிற் புறத்தே நிற்கும்
காவலன்யான்; ஆண்டறியேன் எனினும் நின்றன்
 காவலன்யான்; எனையாளும் அம்மே உன்றன்
கோவிலுறும் வாயிலன்யான்; பெருமை முற்றும்
 குறித்துரைக்கும் வாயிலன்யான்; அதனால் என்றன்
பாவிலுறும் சொல்லிலெலாம் எழுத்தி லெல்லாம்
 பாட்டுவெறி யூட்டியருள் அன்னாய் நன்றே.

(வீரகாவியம்)

# 6. முதன்மைத்தமிழே!

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

அன்னாய்! என்னுயிர் அன்னாய்! தமிழே!
ஒன்னார் மனமும் உருக்குந் தமிழே!
அகப்பகை புறப்பகை கடந்தாய் தமிழே!
தகப்பன் தாயெனத் தகுவழி காட்டி
மிகப்பல் லறநூல் மொழிந்தாய் தமிழே!
உலகம் வியக்க ஒப்பிலாக் குறளால்
கலகம் தவிர்ப்பாய் கன்னித் தமிழே!
இறக்கும் வரைநின் பணியே யல்லால்
துறக்கமொன் றுண்டெனத் துணியேன் தமிழே!
இடுக்கண் வருங்கால் துடைப்பாய் தமிழே!
மொழிவளம் மிகுந்தாய் முதன்மைத் தமிழே!

[பூங்கொடி]

('பூங்கொடி' காப்பியத்தில், 'ஏடு பெற்ற காதை' எனும் பகுதியிலிருந்து எடுக்கப் பெற்ற சிலவரிகள் மட்டும் இங்கு தரப்பெற்றுள்ளன.)

---

ஒன்னார் – பகைவர், துறக்கம்–வீடுபேறு

# 7. நந்தா விளக்கே!

(நிலை மண்டில ஆசிரியப்பா)

செந்தமிழ் மொழியே சீர்சால் விளக்கே!
முந்திய மொழியே முழுமையின் ஒளியே!
கற்றோர் நெஞ்சங் களிக்கும் வகையில்
ஞான ஒளியினை நல்கிடும் விளக்கே!
வறுமையும் இடரும் வட்கார் பகையும்
உறுமிடி புயலென உருத்தெழு நிலையிலும்
என்னுள் நின்றொளி எழிலுற விளங்கிட
நண்ணும் என்னுயிர் நந்தா விளக்கே!
ஆய்தொறும் ஆய்தொறும் அரும்பொருள் நல்கலில்
ஓய்தல் இல்லா உயர்கொடை விளக்கே!
பலபல மொழிகள் பரந்திவண் தோன்றினும்
உலகில் நிகரிலா தோங்குவான் விளக்கே!
நையும் நிலையிலும் நான்களி கொள்ள
உய்யும் வழிதரும் பொய்யா விளக்கே!
காற்றும் மழையும் கடுகிய போதும்
ஏற்றிய உனக்கோர் இடையூ றின்றிப்
போற்றுதல் கடனெனப் பூண்டுளேன் நோன்பு;
தணியா உழைப்புந், தக்கோர் உறவும்,
துணிவுடன் என்னுள் தோன்றுநல் லார்வமும்
முப்புரித் திரியென மொய்ம்புடன் ஏற்றி
எப்பொழு தும்நினை ஏத்துதல் உடையேன்;
உணர்வெனும் நெய்யில் ஊறிய யாப்பில்
புணரணி ஏற்றிப் பொருள்தெரி வகையால்
உலகம் அனைத்துநின் ஒளியினைப் பரப்பக்
குலவும் நினைவே கொண்டுளேன் அதனால்
செய்யும் பணிகள் செவ்விதின் இலங்கிடக்
கைகுவித் தேத்தினேன் காத்தருள் தாயே!

(மனிதனைத் தேடுகிறேன்)

---

வட்கார்–பகைவர்

## 8. எற்குதவுவையே

### (கட்டளைக் கலித்துறை)

பெற்றார் உயிரென நட்டார் பெரியர் சிறியரெலாம்
கற்றா னிலை,சீ எனஎற் கடிந்தே இகழ்ந்துரைக்கச்
சற்றா கினுமதைத் தாளேன் சிறையில்நக் கீரனுக்கா
உற்றாய் தமிழினைப் பெற்றாய் கலைஎற் குதவுவையே

[மாணவப் பருவத்தில் பாடியது]

## 9. நல்குன் அருள்

நீல மணிநிறத்தாய் நின்மலன்றன் பாகத்தாய்
கோல வுருவுடையாய் கொண்டல்மீன் - போல
விழியுடையாய் என்றன் விழுமங்கள் யாவும்
அழிவுறவே நல்குன் அருள்.

(மாணவப்பருவத்தில் தேர்வுக்கு எழுதிய வெண்பா)

## 10. பெருமை பூண்டாள்

உலகெலாம் உய்ய வைக்கும்
　　உயரிய கொள்கை யாவும்
நிலவிய தொகையும் பாட்டும்
　　நிகழ்த்திய சங்கம் ஏறி
அலகிலாப் பெருமை பூண்டாள்
　　அன்னையாம் தமிழ ணங்கின்
மலருலாம் அடிகள் வாழ்த்தி
　　மகிழ்வுற மனத்துள் வைப்பாம்

(ஊன்று கோல்)

## 11. வணங்குகின்றேன்

ஆழமாப் பயின்றே னல்லேன்
        அகலமும் அற்றே யாகும்
யாழநின் னருளா லம்மே
        யாப்பென ஒன்று கட்டிச்
சூழும்நின் னடிக்கே சூட்டிச்
        சொக்கிநான் வணங்கு கின்றேன்
ஏழையேன் இளகும் நெஞ்சில்
        என்றும்நீ இருத்தல் வேண்டும்

(ஊன்றுகோல்)

## 12. செந்தமிழ்த் தாயே!

### எடுப்பு

எங்கள் தமிழ் மொழியே! - உயிரே!

-எங்கள்

### தொடுப்பு

இங்குனை நாங்கள் இகழ்ந்தத னாலே
இழிநிலை அடைந்தோம் உரிமையும் இழந்தோம்

-எங்கள்

### முடிப்பு

பூமியில் மானிடர் தோன்றிய நாளே
பூத்தனை தாமரைப் பூவினைப் போலே
பாமிகும் காவியப் பாவையே தாயே
பணிந்தோம் கடைக்கண் பார்த்தருள் வாயே.

-எங்கள்

இயலிசை கூத்தென இலங்கிடு வாயே
எமதுயிர் உணர்வுகள் யாவையும் நீயே
மயலெமை நீங்கிட மதியருள் வாயே
மைந்தரைக் காத்தருள் செந்தமிழ்த் தாயே.

-எங்கள்

(காவியப் பாவை)

# 13. நினைவோம் உனையே

**எடுப்பு**

வாழ்க தாயகம் - அம்மா
வாழ்க நீயகம் -வாழ்க

**முடிப்பு**

உயிர்நீ உடல்நீ உளம்நீ வளம்நீ
பயிர்நீ பயன்நீ பயன்தரு பொருள்நீ
வெயில்நீ மழைநீ விழிநீ மணிநீ
பயில்தரு சுவைநீ பழகிய மொழிநீ.

வெளிநீ வளிநீ புனல்நீ அனல்நீ
விளைவுறு நிலம்நீ விதைநீ முளைநீ
ஒளிநீ வயல்நீ உயர்வுறு மலைநீ
அளிநீ தொழில்நீ அளவில கலைநீ.

பிறந்தோம் தவழ்ந்தோம் பிணைந்தோம் நடந்தோம்
திரிந்தோம் மகிழ்ந்தோம் திருவாழ் மடியில்
சிறந்தோம் பயின்றோம் சிரித்தோம் வளர்ந்தோம்
நிறைந்தோம் உயர்ந்தோம் நினைவோம் உனையே.

[காவியப் பாவை]

# 14. உயிர்த் தமிழே!

முன்னைப் பழம் பொருளே - வேந்தர்
மூவர் உயிர்த் தமிழே!
கன்னற் சுவை யமுதே - என்றன்
கண்ணின் மணி விளக்கே!
என்னைப் பழிப்பவனை - நான்
ஏதும் நினைப்பதில்லை
உன்னைப் பழிப்பவனைப் - பகையா
உள்ளம் நினைக்கு தம்மா

தீங்குனைச் சாரு தென்றால் - என்றன்
சிந்தை கொதிக்கு தம்மா!
பாங்குனை மேவு தென்றால் - நெஞ்சம்
பாய்ந்து மகிழு தம்மா!
ஆங்கிலம் கற்றவரும் - வந்த
அயல்மொழி கற்றவரும்
ஈங்குப் புறக்கணித்தார் - அறிவை
என்று பெறுவாரோ?

தாயைப் பழித்துரைத்தால் - நெஞ்சம்
தாங்கிட ஒப்பவில்லை
நாயவன் என்றுமிழ - உணர்வு
நாடிப் பெருகுதம்மா!
காயைக் கவர்ந்திடுவார் - நல்ல
கனிச்சுவை தானுணரார்
மாயச் சுமையுடலை - ஓம்பிட
மானம் விலைபகர்வார்.

தோள்வலி மிக்கமையால் - எம்மைத்
தூற்றினர் வடவேந்தர்
வாள்வலி யாலவரை - வீழ்த்தி
வாழ்ந்ததும் இந்தஇனம்
மாள்வது கண்டபினும் - பேதை
மாந்தரும் துஞ்சுகின்றார்!
ஆள்வதும் எம்மொழியோ? - இங்கே
ஆண்மையும் செத்ததுவோ?

(காவியப் பாவை)

## 15. தேனிசை பாடுவென்

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

'என்தாய்ப் பழிப்போர் இனியிரார் உலகில்,
பொன்றாப் புகழ்நூல் புகுந்ததென் கையில்,
இசையும் கூத்தும் இலங்கிய தமிழோ
வசைபெறக் காண்பது? வையகம் எங்கும்
முழக்குவென் முழக்குவென் முத்தமிழ்ப் பெருமை,
சழக்கர் பகைஎலாம் தவிடெனப் பொடியென
ஆக்குவென், எதிர்ப்பெலாம் நீக்குவென், மாசினைத்
தீக்கிரை யாக்கித் தேனிசை பாடுவென்'

[பூங்கொடி]

('பூங்கொடி' காப்பியத்தில், 'சுவடியின் மரபு தெரிவுறு காதை' எனும் பகுதியிலிருந்து எடுக்கப் பெற்ற சிலவரிகள் மட்டும் இங்கு தரப்பெற்றுள்ளன.)

---

பொன்றாப் – அழியாத, சழக்கர் – கயவர்

## 16. வல்லமை தந்தருள்வாய்

முத்தமி ழேஉனை எப்பகை யாகினும்
முற்றிட முன்வருமேல்
எத்தடை மோதினும் அப்படை யாவையும்
எற்றிமு ருக்கிடுவேன்
எத்துயர் நேரினும் அத்தொழில் ஆற்றிட
எப்பொழு தும்தவறேன்
மத்தக யானையைச் செற்றிடும் ஏற்றரி
வல்லமை தந்தருள்வாய்.

[தாய்மொழி காப்போம்]

## 17. எங்கள் தாயே!

விரித்துவரும் வலையிலெலாம் தப்பி நின்று
வீழாமல் சிரிக்கின்ற தமிழ ணங்கே!
குறித்துவரும் பகையஞ்சிப் புறமிட் டோடக்
கூரறிவுப் படைதந்த எங்கள் தாயே!
நெருப்புபுனல் செல்கறையான் வாய்கள் தப்பி
நின்றொளிரும் ஏடுடையாய் அம்மா நின்றன்
சிரித்தமுகங் காண்பதற்கே என்றும் வாழ்வேன்
சிறியன்எனைக் காப்பதுநின் கடமை யாகும்

(தாய்மொழி காப்போம்)

## 18. தொன்மைத் தாயே

காவுக்குள் மலரை வைத்தாய்
	கண்டுக்குள் சுவையை வைத்தாய்
பூவுக்குள் தேனை வைத்தாய்
	பூமிக்குள் பொன்னை வைத்தாய்
ஆவுக்குள் பாலை வைத்தாய்
	ஆர்வத்தில் ஊறும் என்றன்
பாவுக்குள் அனைத்தும் வைப்பாய்
	பாருக்குள் முதன்மைத் தாயே.

கல்லுக்குள் தீயை வைத்தாய்
	கனலுக்குள் வெம்மை வைத்தாய்
வில்லுக்குள் வீரம் வைத்தாய்
	வேலுக்குள் கூர்மை வைத்தாய்
செல்லுக்குள் இடியை வைத்தாய்
	சிந்தைக்குள் பொங்கும் பாடற்
சொல்லுக்குள் அனைத்தும் வைப்பாய்
	தொன்மைக்குள் தொன்மைத் தாயே.

[நெஞ்சு பொறுக்கவில்லையே]

---

செல்–முகில், கா–பூங்கா

# 19. தாள் பணிந்தேன்
## கலி வெண்பா

.............................................................

.............................................................

காலத்தை வென்றவளே, கற்பனைக்கும் எட்டாமல்
ஞாலத்தில் நின்றொளிரும் நந்தா மணிவிளக்கே,
நெஞ்சத் திருக்கோவில் நின்றிருந் தெந்நாளும்
அஞ்சலெனச் சொல்லி அரவணைக்குந் தெய்வதமே,
நெஞ்சை அகலாக்கி நீங்காத அன்பென்னும்
பஞ்சைத் திரியாக்கிப் பற்றும் உணர்வை
எரியாக்கி ஏற்றும் எழில்விளக்கே, முன்னைப்
பெரியார்க்குந் தோன்றாப் பெருமை படைத்தவளே,
சங்கத்தார் நெஞ்சமெனுந் தண்பொழிலிற் கூடிமனம்
பொங்கத்தான் ஆடிவரும் புள்ளி எழில்மயிலே,
பாவாணர் நாவிற் பழகிப் பழகிநின்று
கூவாமற் கூவிக் குளிர்விக்கும் பூங்குயிலே,
அப்பாலும் இப்பாலும் ஆடித் திரியாமல்
தப்பேதுஞ் செய்யாமல் தக்க நெறிநடக்க
எப்போதும் நன்றுரைத் தெம்மைப் புரப்பதற்கு
முப்பாலைத் தந்து முறைப்படுத்தும் நற்றாயே,
மோதும் பகைதவிர்க்க மொய்ம்புடனே சென்றங்குத்
தூதுசொலி மீண்ட துணிவுடைய பாட்டரசி
அவ்வைப் பெருமாட்டி ஆண்டாண்டு வாழ்ந்திடவே
செய்வித்த பேராற்றல் சேரும் செழுங்கனியே,
கற்புக் கடம்பூண்ட கண்ணகியாம் பெண்மகளைப்
பொற்புடைய தெய்வமெனப் போற்றி வணங்குதற்குக்
கற்கோவில் அன்றெடுத்த நற்கோவின் பின்வந்த
சொற்கோவின் காப்பியத்துள் தோன்றிவரும் யாழிசையே,

---

மொய்ம்பு - விருப்பம்

சாலறிவன் வாணிகத்தான் சாத்தன்மணி மேகலையாம்
நூலதன்பால் இட்டுவைத்த நுண்புலமை வைப்புமுதல்
வற்றாது மேலும் வளஞ்சுரந்து கூடிவர
அற்றைநாள் கண்ட அமுத சுரபியே.
தேவன் திருத்தக்கன் செம்மையுறச் செய்தளித்த
பாவல்ல சிந்தா மணியிற் படரொளியே.
வன்பில் திணிக்காமல் வந்த வடமொழியைத்
தென்பாகக் கற்றுணர்ந்து தேர்ந்த ஒருகம்பன்
நாவிரித்த பாட்டில் நடம்பயின்று வந்தெங்கள்
காவிரித்தாய் வெள்ளம்போற் காணுங் கவிநலமே
பூவேந்திப் பொங்கிப் பொழிகின்ற தேனெடுத்து
நாவேந்தத் தந்தசுவை நன்றறன் றெனவுரைக்கப்
பாவேந்துஞ் சொற்சுவையாப் பாடியவெண் பாவேந்தன்
பூவேந்தத் தந்த புகழேந்தி வந்தவளே.
சீர்கெட்டுப் பாடித் திருட்டுக் கவிபாடிப்
பேர்கெட்டுப் போனாலும் பேர்கவிஞன் என்றுரைத்துப்
பாட்டுத் தளையறுத்துப் பாடிவரின் கூத்தனதைக்
கேட்டுத் தலையறுத்தான் என்று கிளர்ந்திடுவர்;
பாட்டுத் திறமறியாப் பாவலரைச் சீறியெழுந்
தோட்டுத் திறலுடையான் ஒட்டக்கூத் தன்பாவால்
வெற்றுக் கவியென்று வெட்டியும் பாடிடுவான்
உற்ற உயர்கவியென் றொட்டியும் பாடிடுவான்
வெட்டியும் ஒட்டியும் வேண்டும் படியுரைத்த
ஒட்டக்கூத் தன்பாட்டில் ஒட்டிவருங் காரிகையே.
பண்டைநாள் தொட்டுப் பகையாக வந்தவற்றைக்
கண்டு கலங்காமற் கண்டாய் களம்பலவும்
சென்றகள மெல்லாம் செயங்கொண்டாய் ஆதலினால்
இன்றும் பரணிபல ஏற்றுவரும் போர்முரசே.
தென்மலையில் தோன்றித் திரிகூட ராசன்றன்
சொன்மிடையும் பாட்டொலியிற் சொக்குகுற வஞ்சியே.

'எல்லா மதங்களுமுண் டென்றாலும் ஓர்பகையும்
அல்லா மதமொன்றே ஆக்கிடுக மானிடமே,
கூறாய்ப் பிரியல்' எனக் கூறியிங்கு யாவரையும்
சீறா நலங்கொண்டு சேர்த்தணைக்குஞ் செந்தமிழே,
'சாதி சமயமென்று சண்டையிட்டு மாயாதீர்
சோதி வடிவொன்றே தூய இறை' என்று
வள்ளலருட் பாவில் வடித்தெடுத்த தேன்சுவையே,
உள்ளம் உருக்கி உணர்விக்குந் தெள்ளமுதே,
என்று புகழ்பாடி என்னம்மை தாள்பணிந்தேன்
..............................................................
..............................................................

[தமிழ் முழக்கம்]

---

('பாட்டுப்பறவைகள்' எனுந்தலைப்பில் பாடப்பெற்ற கவிதையிலிருந்து எடுக்கப் பெற்ற சில அடிகள் மட்டும் இங்கு தரப்பட்டுள்ளன.)

# 20. உலகைக் காக்கின்றாள்

எண்ணி லடங்காத எத்தனையோ நன்மொழிகள்
மண்ணிற் பிறந்து வளமையுறாக் காலத்தே
தன்வளமை காட்டித் தனிப்பெருமை கொண்டிலங்கிச்,
சொன்மரபு மாறாமல் தூய நிலைநாட்டி,
வாழ்க்கைப் பெருநிலத்தை வளமாக்கிச் செம்மைதனைச்
சேர்க்கப் பொருள்நூலைச் செப்பிப் பெருமையொடு
செப்பமுறச் செய்தமையால் செந்தமிழென் றோதினரோ?
அப்பெருமை யாரே அறிந்துரைக்க வல்லார்கள்?
மெய்யுணர அன்புணர மேன்மைத் திறமுணர
உய்வகைகள் தேர்ந்தே உளந்தெளிய வையத்துள்
வாழ்வாங்கு வாழ வழிவகுத்துத் துன்பமெனும்
பேழ்வாய் எரிநரகில் பேதுற்று வீழாமல்
இம்மையினில் காக்கும் இணையில்லா ஓர்மறையால்
செம்பொருளைக் காட்டுவதால் செந்தமிழென் றோதினரோ?
நூல்மறைந்து போனாலும் நுண்மாண் நுழைபுலத்துக்
கால்மறைந்து போனாலும் காக்கும் அகத்தியனும்
பல்காப் பியந்தோன்றப் பாட்டு நெறியுரைக்குந்
தொல்காப்பி யனென்னுந் தூயோனுந் தோன்றியிங்கு
நம்மொழியைக் காப்பதற்கு நல்வரம்பு கட்டிஅதைச்
செம்மையுறச் செய்தமையால் செந்தமிழாக் கண்டனரோ?
ஆரியம்போற் பேச்சற் றழிந்து சிதையாத
சீரிளமை கண்டவர்கள் செம்மைமொழி என்றனரோ?
நீரால் நெருப்பால் நிலைகுலைந்து போகாமல்
சீராய்த் திகழ்வதனால் செந்தமிழென் றோதினரோ?
முந்தைத் தமிழ்கெடுக்க மூண்டெழுந்த நோக்கமுடன்
எந்தத் துணைகொண்டிங் கெந்தமொழி வந்தாலும்
நோவுக்கும் அஞ்சோம் நொடிப்பொழுதில் வீழ்கின்ற
சாவுக்கும் அஞ்சோம் தமிழ்காப்போம் என்றெழுந்த
அஞ்சலிலாக் கூட்டத்தை ஆளவந்தோர் தாக்கியதால்
நெஞ்சிருந்து சிந்தி நெடிதோடுஞ் செங்குருதி
பாய்ந்து தமிழ்மொழியாம் பைங்கூழ் செழிப்பதனால்

ஆய்ந்தமொழி செந்தமிழென் றானதென நானுரைப்பேன்;
ஆரியத்தார் ஆட்சிமுதல் ஆங்கிலத்தா ராட்சிவரை
சீரழித்த ஆட்சிகளைச் செப்பத் தொலையாது;
தேன்மொழியாந் தென்மொழியின் சீர்மை பரவிவர
மீன்புலிவில் ஏந்திநல் மேலோர் துணைநின்று
காத்ததிரு நாட்டிற் கதவு திறந்திருக்கப்
பார்த்திங்கு வேற்றுப் பகைமொழிகள் உள்நுழைந்து
நீக்கமற எங்கும் நிறைந்தாலும் நம்மினத்தார்
தூக்கங் கலையாமல் சோர்ந்து கிடந்தாலும்
நான்வணங்குந் தெய்வ நலமிக்க செந்தமிழ்த்தாய்
தேன்வழங்கும் நாண்மலர்போல் என்முன் திகழ்கின்றாள்;
அன்னை திருமுகத்தில் அணுவளவும் சோர்வின்றி
என்னை வளர்க்கின்றாள் இவ்வுலகைக் காக்கின்றாள்;

. . . .. . . . .. . . . .. . . . .. . . . .. . . .

. . .. . . . .. . . . . . . . . . . . . . . . . . .

எங்கெங்குந் தாய்மொழிக் கேற்றம் மிகக் காண்போம்
இங்கினிநம் செந்தமிழ்க்கோர் ஏறுமுகம் ஈதுறுதி
எங்குத் தமிழாகும் எல்லாந் தமிழாகும்
பொங்கும் இனிமேற் பொலிந்து

(தாய்மொழி காப்போம்)

---

('தமிழின் செம்மை' எனுந்தலைப்பில் பாடப்பெற்ற கவிதையிலிருந்து எடுக்கப்பெற்ற சில அடிகள் மட்டும் இங்கு தரப்பட்டுள்ளன.)

## 21. தெய்வத் திருமகளே
### கலி வெண்பா

பேருலகில் நான்குமொழி பெற்றாலும் இன்றுவரை
சீரிளமை குன்றாத தெய்வத் திருமகளே,
ஆடிப் பெருக்காலும் ஆர்த்த நெருப்பாலும்
வாடிச் சிதையாமல் வாழ்ந்து வருபவளே,
பொங்கிச் சினந்தெழுந்து போராட வந்தகடல்
சங்கத்து வைத்திருந்த சான்றோர்தம் ஏடுபல
கொள்ளைகொண்டு போனாலுங் கோலஞ் சிதையாமல்
உள்ள தமிழரசி ஒப்பில்லா வாழ்வரசி,
மூவேந்தர் ஆட்சி முடிந்தபினர் யார்யாரோ
கோவேந்தர் என்றிங்குக் கோலேந்தி வந்தவர்கள்
அவ்வவர்தம் தாய்மொழிக்கே ஆக்கங்கள் தந்தாலும்
செவ்வியநல் லாற்றல் சிதையாமல் நிற்பவளே
..............................................................
..............................................................

[தமிழ் முழக்கம்]

---

('ஊர்வலக்காட்சி' எனுந் தலைப்பில் பாடப்பெற்ற கவிதையிலிருந்து எடுக்கப்பெற்ற சில அடிகள் மட்டும் இங்கு தரப்பட்டுள்ளன.)

## 22. போற்றி! போற்றி!

எழுத்தின் வகையெலாம் இயம்புவாய் போற்றி!
பழுத்த சொற்றிறம் பகர்வாய் போற்றி!
பொருள்கள் பற்பல அருள்வாய் போற்றி!
யாப்பெனும் அருங்கலன் இசைப்பாய் போற்றி!
அணிகள் எழிலுற அணிவாய் போற்றி!
போற்றி ஐந்திறம் புகலும் தாயே!

(தமிழ் முழக்கம்)

# 23. தமிழன்னை பிள்ளைத்தமிழ்

## (காப்புப் பருவம்)

## (பன்னிருசீர் விருத்தம்)

உலகினில் முதன்முதல் நிலவிய மொழியெனும்
உரைபெறுந் திருமகளாம்
உயர்தனி மொழியென அயலவர் புகன்றிட
ஒளிதரு செம்மகளாம்.
அலைபல எதிரினும் நிலைபெறும் கலைமகள்
அமுதெனும் மொழியினளாம்
அழகிய கழகமொ டுலவிய தமிழ்மகள்
அணிநலம் புரந்திடவே

கற்பார் மனத்துணர்வை நற்பா படைத்துவளர்
கவிவாணர் அடிப்பூவையும்
கனலால் எரிந்துசிறை புகலால் மடிந்துமொழி
கருகாது வளர்த்தோரையும்
விற்போர் தொடுத்ததெனச் சொற்போர் நடத்திஉரம்
விளைவாக உழைப்போரையும்
விதிரா மனத்துணர்விற் புதிதாய்த் தழைத்துவரும்
விழைவோடு தொழுதேத்துவாம்.

மற்போர் புரிந்துநம திப்பார் புரந்தவரின்
மடிமீது வளர்ந்தமகளை
மருவார் பகைத்தருகில் வருவார் பதைத்துவிழ
மலைபோல நின்றமகளை
முப்பா லருந்திநலம் தப்பா திருந்தவளை
முதலாக வந்தமகளை
முதிரா நலத்திளமை அதிரா தெடுத்துவரும்
மொழியாளைப் புரந்தருளவே.

[தாய்மொழி காப்போம்]

## 24. செந்தமிழ்ச் செல்வி

கேளார் தமிழ்மொழி கேடுறச் சூழ்ந்திடுங்
கீழ்மதியை
வாளால் அரிந்ததன் வேரைக் களைந்துநம்
வண்டமிழைத்
தாளால் வளர்த்தனை; தண்புனல் வார்த்தனை;
நின்குறிக்கோள்
சூளாக் குறித்தனை தொண்டுசெய் கின்றனை
தூமொழியே,

செல்வியுன் தாளிற் சிலம்பும் பரலும்
செவிகுளிர
நல்கிடும் அவ்விசை நாள்முழு தும்பெற
நாடுகின்றோம்;
மெல்விரல் நீவி மிழற்றிய யாழொலி
போலஇதழ்
சொல்லிய பாடலிற் சொக்கிநின் றேஉனைச்
சுற்றுதுமே.

நடைஎழில் காட்டுவை, நல்லறி வூட்டுவை,
நாண்மலரால்
தொடைஎழில் காட்டுவை, தோகையுன் சாயலில்
தோய்ந்துணரார்
உடைஎழில் ஒன்றே உவந்தன ராகி
உணர்விலராய்க்
கடைவழி ஏகுவர் காரிகை உள்ளெழில்
காண்கிலரே.

---

தாளால்–முயற்சியால்

புகழ்மலை உச்சியில் போற்றிட வாழ்ந்தவர்
பூவுலகில்
இகழ்நிலை எய்தினர் எம்மவர் என்றுளம்
ஏங்குகையில்
தகவுடன் மீண்டுந் தலைநிமிர்ந் தோங்கிடத்
தாளெடுத்தே
அகவிடுந் தோகையென் றாடவந் தாயெங்கள்
ஆரணங்கே.

முந்தையர் தந்தநன் னூல்மலர் மொய்த்ததன்
தேனருந்திச்
சந்தனத் தென்மலைச் சாரலின் செந்தமிழ்
தந்தநலம்
சிந்தையுள் தேக்கிநற் செல்வழிப் பண்தரும்
தும்பியென
வந்திடுஞ் செந்தமிழ்ச் செல்விபல் லாண்டுகள்
வாழியவே.

[தாய்மொழி காப்போம்]

## 25. தாயே போற்றி!

தாயே போற்றி, தமிழே போற்றி;
நீயே உயிரென நினைவேன் போற்றி!
ஈன்ற உன்னை இனிதிற் காக்க
மூன்று கழகம் முந்தையர் கண்டனர்;
வழிவழி வந்தோர் வாழ்வுனக் களிக்க
எழிலுறு கழகம் இற்றையர் கண்டனர்;
வளமுற நின்னலம் வளர்த்து வருதலாற்
கழக வுணர்வுகள் கருத்திற் கலந்தன;
வருத்துமென் வாழ்வு வளமுறற் பொருட்டோ
கருத்திற் கலந்தன கழக வுணர்வுகள்?
வயிற்றைக் கழுவும் வழியெனக் கருதிலேன்
எயிற்றைக் காட்டும் இழிகுணம் எனக்கிலை;
பழியுனக் குறுமேல் பாய்ந்ததைத் தடுக்கக்
கழகம் ஒன்றே களமெனக் கண்டேன்!
உன்னால் அன்றோ கழக வுணர்வுகள்
என்னுட் புகுந்தன இறுகப் பற்றின;
கழகப் பாவலன் யானுனைக் காப்பேன்
உளமுறும் உணர்வே வாழிய தமிழே!

(நெஞ்சிற்பூத்தவை)

---

எயிறு – பல்

# 26. நானொரு குழந்தை

குடும்பம் எனக்கோர் நடைவண்டி - நல்ல
கொள்கை வெறிதான் தொடர்வண்டி
இடும்பை தவிர்த்திடும் முப்பாலே - என்னை
இனிதே வளர்த்திடும் தாய்ப்பாலாம்.

ஆயும் மொழியே சிறுகோலி - அதனை
அறிவால் தெறிப்பேன் குழிகோலி
பாயும் குழியோ கவியாகும் - ஆடல்
பார்த்து மகிழ்வது புவியாகும்.

பாமலர் என்றன் மழலைமொழி - பாட்டில்
பாவும் பொருளே குவளைவிழி
மாமழை வானந் தவழும்வழி - அங்கே
மதியம் உருள்பந் தெனதுவழி.

காவியம் என்றன் மணல்வீடு - பொங்கும்
கற்பனை யதுதான் சிறுசோறு
வாவினி அம்மா மகிழ்வோடு - நெஞ்சின்
வாழை விரிப்பேன் பரிவோடு.

உலகின் நிலையே தெரியவிலை - அங்கே
உண்மையும் பொய்யும் புரியவிலை
அலகில் விளையாட் டாடிவேன் - என்னோ
டாரும் வரவிலை கூடிடவே.

உள்ளஞ் சுடுசொல் பொறுப்பதிலை - சொன்னால்
உடனே அழுவேன் வெறுப்பதிலை
கள்ளங் கவடந் தரிப்பதிலை - நீயேன்
கனிவாய் மலர்ந்தே சிரிப்பதிலை?

அழுக்கா றாசை வெகுளியெனும் - நெஞ்சின்
அழுக்குகள் யாவுங் கழுவினை நீ
இழுக்கா மானம் அருளறிவு - அணிகள்
எத்தனை எத்தனை அருளினை நீ!

நின்னருள் மாமழை பொழிந்திடுவாய் - நானும்
நீங்கா ததனுள் நினைந்திடுவேன்
என்னுயிர் நீதான் தமிழும்மா - என்னை
எடுத்தொரு முத்தம் அருளம்மா.

[பாடுங்குயில்]

## 27. என்றும் பிறப்பேன்

(54 ஆம் பிறந்த நாளன்று பாடியது - 07.10.1973)

அன்று பிறந்தேன் அரைநூற்று மூன்றன்பின்
இன்றும் பிறக்கின்றேன் என்தமிழ்க்கு - நன்றுசெய
என்றும் பிறப்பேன் இளங்குழந்தை போலிருப்பேன்
தொன்றுதமிழ் முப்பால் சுவைத்து.

காலம் அனைத்துங் கலங்காத நெஞ்சுரமும்
ஞாலம் வணக்குபுகழ் நற்கவியும் - கோலமுறச்
சூழ்ந்திருக்கும் நட்பும் சுடர்க்கொடிநான் பெற்றென்றும்
வாழ்ந்திருக்க ஈவாய் வரம்.

சொல்லும் மொழிக்குள்ளே சூடேற்றித் தீமையெலாம்
வெல்லுந் திறமளிக்க வேண்டுமம்மா - நல்ல
உலகொன்று காண உளங்கொண்டேன் அன்னாய்
நிலைகொண்டு வந்தென்முன் நில்.

[பாடுங்குயில்]

## 28. தமிழுக்கு என்னைத் தருவேன்

(56ஆம் பிறந்த நாளன்று பாடியது - 07.10.1975)

சுற்றிவ ளைத்திடு மெத்துய ரத்தையும்
சுட்டுமு டித்ததை - எறிவேனே
சொத்துந லத்தினை முற்றஇ ழப்பினும்
சொற்றமி ழுக்கெனைத் - தருவேனே.

தொற்றிய ணைத்தவ ளைப்பெறு மக்களைத்
தொட்டிடர் பற்றினும் - மருள்வேனோ?
சொக்கிட வைத்திடும் எப்பொருள் கொட்டினும்
தொட்டுளம் விற்றிட - வருவேனோ?

கற்றம னத்தினிற் குற்றம கற்றிடும்
கட்டழ குத்தமிழ் - மொழிமாதே
கத்துக டற்புவி மெத்தம டத்தனம்
கற்றடி மைப்படத் - தரியேனே.

பெற்றநி லத்தினர் உற்றஇ டுக்கணைப்
பிய்த்தெறி யத்திறம் - அருள்வாயே
பித்தம னத்தினர் நற்றெளி வுத்திறன்
பெற்றிட நற்கவி - பொழிவேனே.

[பாடுங்குயில்]

## 29. ஏங்குதல் நீதியோ?

தாயுன தின்னருள் பாடவைத்தாய் - துன்பந்
 தாக்கிட ஏனுளம் வாடவைத்தாய்?
ஆயும் புலமையை நாடவைத்தாய் - அம்மா
 அப்புறம் ஏன்பொருள் தேடவைத்தாய்?

கைப்பொருள் என்னிடம் தங்கவிட்டால் - நெஞ்சிற்
 காயங்கள் யாவையும் மங்கிவிட்டால்
மெய்ப்பொரு ளின்மனம் பொங்கவிட்டே பார்ப்பேன்
 மேனியில் பாமலர்த் தொங்கலிட்டே

விண்ணுல கொன்றனை நான்படைப்பேன் - அங்கே
 விந்தைகள் ஆயிரம் மேலமைப்பேன்
மண்ணுல குய்ந்திடத் தேன்கொடுப்பேன் - இந்த
 மைந்தனைத் துன்புற ஏன்விடுத்தாய்?

மாமயில் போலொரு மங்கையினாள் - நல்ல
 மாலைச் சுடர்நிகர் செங்கையினாள்
காமுறு வேளையில் அங்கவளை - ஏனோ
 கட்டுற வைத்தனை சங்கிலியால்?

கற்பனை வான்மிசை நான்பறப்பேன் - அங்கே
 காதல் மகள்தரும் தேன்சுவைப்பேன்
பொற்புடை யாளவள் தானழைத்தாள் - வானில்
 போய்வரு மென்சிற கேனறுத்தாய்?

இன்ப மெனுங்கடல் பாய்ந்திருப்பேன் - அங்கே
எத்தனை எத்தனை ஆய்ந்திருப்பேன்
மன்பதை உய்ந்திட ஈந்திருப்பேன் - நீயேன்
வந்தரு ளாமலே ஓய்ந்திருந்தாய்?

உன்னை விடுத்தொரு சுற்றமில்லை - நெஞ்சில்
ஒட்டிய வேறொரு பற்றுமில்லை
என்னைப் புரப்பதில் குற்றமில்லை - அம்மா
ஏங்குதல் நீதியோ பெற்றபிள்ளை?

(பாடுங்குயில்)

# 30. மறந்தறியேன்

## எடுப்பு

தாயே உனைநான் மறந்தறியேன் - நின்
தாளலால் வேறெதும் நினைந்தறியேன் - தமிழ்த்

-தாயே

## தொடுப்பு

நீயே துணையென்று நெஞ்சினில் கொண்டு
நினைந்திடும் மனைதனை மறந்ததும் உண்டு

-தாயே

## முடிப்பு

உன்முகம் மலர்ந்தால் என்முகம் மலர
உளமகிழ்ந் திருந்தேன் உலகினை மறந்தேன்
என்முகஞ் சுருங்கிட நன்மனம் வருந்திட
ஏனெனை விடுத்தாய் இடர்தனைக் கொடுத்தாய்

-தாயே

நொந்தே நின்மகன் நுடங்கிடல் நன்றோ?
நோய்தனை நீக்கிடல் தாய்கடன் அன்றோ?
நந்தா விளக்கே நானென்ன செய்தேன்?
நாளெலாம் இருள்தனில் நலிந்திடச் செய்தாய்

-தாயே

(காவியப் பாவை)

## 31. தமிழ் பாடத் தடையா?

தமிழேஉன் புகழ்பாட வாழ்வெடுத்தேன் - ஆசை
தணியாமல் இசைகூட்ட யாழெடுத்தேன்

-தமிழே

இமைமூடும் விழியாலே எதுகாண முடியும்?
எழில்யாழை உறைமூடின் எதுபாட இயலும்?

-தமிழே

நரம்பேழும் நலமாக முறுக்கேற வைத்தேன் -நீ
நரம்போடு விளையாடும் விரல்சோர வைத்தாய்
திறம்பாடி உயிர்வாழுங் குறியோடு நின்றேன் - நீ
திரும்பாமல் முகங்கோடிச் சிலையாக நின்றாய்

-தமிழே

சுமையாகத் துயர்வந்தே எனைமோதல் முறையா?
சுரம்பாடும் நரம்பொன்று பகையாதல் சரியா?
எமையாளுந் தமிழேஉன் புகழ்பாடத் தடையா?
இரங்காமல் இருக்கின்றாய் இதுதான்உன் விடையா?

-தமிழே

(பாடுங்குயில்)

---

கோடி - திருப்பி, வளைந்து, சாய்ந்து

# 32. பாடிக் கொண்டேயிருப்பேன்

பாடிக்கொண் டேயிருப்பேன் - என்
பைந்தமிழைச் செந்தமிழை நான்

-பாடிக்

ஓடிக்கொண் டேயிருக்கும் ஊறுஞ்செங் குருதி
ஓடா துறைந்தே ஓய்ந்திடும் நாள்வரை

-பாடிக்

கடும்பிணி கொடுஞ்சிறை கடுகி வந்தாலும்
கலக்கிடும் வறுமைகள் காய்ந்திடும் போதும்
இடும்பைகள் வந்தெனை எற்றிடு மேனும்
எதையும் அஞ்சிடேன் என்றுமே துஞ்சிடேன்

-பாடிக்

பதவியும் பட்டமும் பணங்களுங் காட்டிப்
பகட்டினும் எதற்கும் பணியேன் கைநீட்டி
முதுமொழி என்மொழி முத்தமிழ் மொழியை
மொய்ம்புறக் காத்திட முனைந்திடும் வழியைப்

-பாடிக்

(தாய்மொழி காப்போம்)

## 33. பற்றுகள் இல்லேன்

கற்பவர் நெஞ்சில் எல்லாம்
களிப்பினை ஊட்டும் தாயே!
முற்படும் மொழிகட் கெல்லாம்
மூத்தவள் எனினும் நின்னைப்
பற்றிய இளமை குன்றாப்
பைந்தமிழ் அன்னாய் என்று
சொற்றிடல் தவிர வேறு
பற்றுகள் இல்லேன் அம்மா!

(புதியதொரு விதி செய்வோம்)

## 34. இனியெனக்கென்ன வேலை?

தனிமையில் உழலு கின்றேன்
தளர்ச்சியும் உடலிற் கொண்டேன்;
எனினுமுன் நினைவால் நெஞ்சில்
எழுச்சிமீக் கூர்தல் கண்டேன்.
கனிவுடன் அம்மா என்றன்
கற்பனைத் தேன்நி றைந்த
தனிமலர் தூவி நின்றன்
தாள்மலர் வாழ்த்து கின்றேன்.

இடர்பல சூழ்ந்த போதும்
என்னுடல் தளர்ந்த போதும்
மிடியெனைத் தின்ற போதும்
விழியொளி குறைந்த போதும்
கடமையில் தவறேன் அம்மா;
கனிந்துனைப் பாடிப் பாடி
இடுபணி புரித லன்றி
இனியெனக் கென்ன வேலை?

(நெஞ்சிற் பூத்தவை)

## 35. அன்னாய் வாழ்க!

ஆடகக் குழைகள் ஆட
அடியினிற் சிலம்பும் ஆடப்
பாடமை வளைகள் ஆடப்
பையமே கலையும் ஆடக்
கூடெழில் மணிகள் ஆடக்
குலவியே எனது நெஞ்சுள்
நாடகம் ஆடும் நங்காய்
நற்றமி ழன்னாய் வாழ்க

முதுமைவந் துற்ற போதும்
முழுவலி யற்ற போதும்
கதுவுபல் பிணிகள் பற்றக்
கலங்கியே நின்ற போதும்
எதுதுயர் நேர்ந்த போதும்
எவர்பழி செய்த போதும்
புதுமையோ டிளமை பூண்டு
பொலிவுடன் ஆடு கின்றேன்

உற்றுளே கலந்து நீயென்
உயிருடன் உறைத லாலே
கற்றவன் போல யானும்
களிநடம் ஆடு கின்றேன்
குற்றமொன் றுறுமேல் நின்றன்
குறையலால் என்பா லில்லை
சற்றுநீ விழித்து நின்பின்
சாருமோ குற்ற மிங்கே

[இளம்பெருவழுதி]

## 36. தோளும் வலிவும் துணை

ஆளென் செயும்விடும் அம்பென் செயும்என் அருகில்வரும்
தேளென் செயும்எறி வேலென் செயும்முனை தீட்டுமரி
வாளென் செயும்மனத் திண்மையும் அஞ்சா மனநிலையும்
தோளும் வலிவும் துணையென என்முனம் தோன்றிடினே

(நெஞ்சிற் பூத்தவை)

## 37. நினது மலரடிக்கே

வாளால் பிளப்பினும் வாழ்நாள் இழப்பினும் வஞ்சமனக்
கேளார் குழுமிக் கெடுதிகள் சூழினும் பூமியில்வாழ்
நாளெலாம் வாட்டும் நலிவே உறினும் நற்றமிழே
ஆளாதல் திண்ணம் அடியேன் நினது மலரடிக்கே!

[பாட்டுப்பறவையின் வாழ்க்கைப் பயணம்
–தன்வரலாறு]

## 38. வாழ்த்தி நிற்பேன்

கவிதைஎனுங் காதலிபால் உன்னைப் பெற்றேன்
கண்ணம்மா! தமிழ்மகளே! முத்த மிட்டேன்
கவிவெறியோ கள்வெறியோ அறிய கில்லேன்
கனவுலகில் பறக்கின்றேன் தரையில் நில்லேன்;
செவிபொருந்தும் விழிகண்ணீர் சிந்தக் காணின்
செங்குருதி பீறிட்டென் னெஞ்சிற் கொட்டும்
புவிபுகழும் நீகலங்கப் பார்த்து நில்லேன்
போர்தொடுப்பேன் உனைக்காப்பேன் வாழ்த்தி நிற்பேன்.

[கவியரங்கில் முடியரசன்]

## 39. நீயின்றி நானில்லை

தென்னகத்துத் திருமகளே! கனியே! நெஞ்சில்
தித்திக்கும் கனிச்சாறே! சுளையே! தேனே!
என்னகத்து நின்றுநடம் ஆடும் பாவாய்!
எழிலரசி! எஞ்ஞான்றும் இளமைத் தோற்றம்
நின்முகத்துக் காண்கின்றேன் களிப்பில் மூழ்கி
நிகரில்லை நினக்கென்றே நிமிர்ந்து நோக்கி
உன்னலத்தைக் காதலித்தேன் உயிர்மூச் செல்லாம்
உனக்கென்றே வாழ்கின்றேன் தமிழ ணங்கே.

உனையீன்ற நாட்டுக்கு நன்றி சொல்வேன்
உனைவளர்த்த பெரியோர்க்கும் சொல்வேன் நன்றி
சுனையீன்ற நாண்மலரே! நின்னெ ழிற்குச்
சூட்டிமகிழ் அணிகலன்தாம் கணக்கில் உண்டோ?
நனியிகந்த செல்வமகள் என்ற றிந்தும்
நானொருவன் ஏழையுனை நாடு கின்றேன்
எனையிகழேல் நீயின்றேல் நானும் இல்லை
என்னுயிரும் நினக்கென்றே இருக்கின் றேனே.

# 40. தமிழே வா!

தமிழே வா செந் தமிழே வா
தவித்திடும் என்முன் தனிநடை காட்டித் - தமிழே

அமிழ்தோ பாகோ அடைதரு தேனோ
அரும்பிய வாய்மொழி கரும்பின் சாறோ - தமிழே

காலின் சிலம்பொலி காதினில் இனிக்கக்
கைவளை ஒலியும் கலந்தினி திசைக்க
நாலடி பாலொடு நடந்துநீ வருவாய்
நாலா யிரம்பா நான்தரப் பெறுவாய் - தமிழே

அணியும் பொருளும் அளவில் கொண்டாய்
ஆயினும் நான்சில அளித்ததும் கண்டாய்
வணிகன் வழங்கிய மேகலை ஆடிட
வருவாய் வருவாய் வந்தெனைக் கூடிடத் - தமிழே

நீதருங் கலியால் நெகிழ்ந்ததென் நெஞ்சம்
நினையே நினைந்து நினைந்துளம் கெஞ்சும்
பாதருங் காவியப் பாவையே நீயே
பரிவுடன் கடைக்கண் பார்த்தருள் வாயே - தமிழே

புறத்தொழில் காணலும் சிலிர்த்ததென் உளமே
அகத்தெழில் காணவும் துடித்ததென் மனமே
புறப்படும் இன்பம் தொகைதொகை யாகப்
புதுச்சுவை காண்பேன் துயரங்கள் ஏகத் - தமிழே

[நெஞ்சிற் பூத்தவை]

---

(கலி–துயரம், கலித்தொகை)

# 41. வெறி வேண்டும்

காதல் வெறி வேண்டும் - தமிழ்ச்செல்வி
காதல் வெறி வேண்டும் - என்றன்
பேதை மனத் திடையே - உன்றன்எழில்
பேரொளி வீசிடவே - அந்தக்
காதல் ஒளிப் பிழும்பால் - இன்பநிலை
கண்டு களித்திடுவேன் - இன்பப்
போதை வெறி யினிலே - வான்வெளி
புக்குப் பறந் திடுவேன்

செல்வத் திரு மகளே- உன்னைநான்
சேர நினைக் கையிலே - வஞ்சம்
புல்லும் மனத் தவர்தாம் - கூடியொரு
புன்மை தரு வாரேல் - என்றன்
மல்லல் திரு நெடுந்தோள் - பகையை
மாற்றிப் புறங்காண - உன்றன்
முல்லை நகை காட்டிப் - போர்வெறி
மூட்டித்தர வேண்டும்.

போரில் உரம் காட்டி - உன்னைநான்
போற்றி மலர் சூட்டி - என்றும்
வாரி நலம் பருகி - நல்லின்ப
வாழ்வு பெற வேண்டும் - அந்த
வாரி யிடை மூழ்கிக் - கண்டநலம்
வாழ்த்திப் புகழ்ந் துரைத்து - நின்னைப்
பாரில் உயிர்த் துதற்கே - என் நெஞ்சில்
பாட்டு வெறி வேண்டும்.

[காவியப் பாவை]

# 42. தமிழ் – என் காதலி

பாரி மலை யருகில் - நல்ல
பண்பினர் வா ழிடமாம்
ஊரில் ஒரு பொழிலில் - உனை நான்
உற்றறி நாள் முதலே
மீறிய கா தலினால் - தமிழே
மெய்ம்மறந் தே உழல்வேன்
கூரிய நின் விழியால் - எனை நீ
கொல்வது தான் சரியோ

ஆசை மனத் திரையில் - எண்ணம்
அத்தனை யுங் கலந்து
பாச முடன் எழுதி - உருவைப்
பார்த்து மகிழ்ந் திருப்பேன்
பேச மன மிலையேல் - உயிரைப்
பிய்த்தெனைக் கொன் றுவிடு
மோசம் புரி வதென்றால் - என்றன்
மூச்சை நிறுத் திவிடு

உன்னைப் பெறு வதற்கே - இங்குநான்
ஓடித் திரி வதெல்லாம்
என்னைப் புறக் கணித்தால் - உயிரை
எப்படி நான் சுமப்பேன்
உன்னெழிற் கா தலன்றோ - என்னை
உன்மத் தனாக் குதடி
கன்னற் சுவை மொழியே - என்னைக்
கட்டி யணைத் திடடி

செல்வம் உற வரினும் - வறுமை
சேர்ந்து துயர் தரினும்
பல்வகை இன் னலிலும் - என்மனப்
பாவையே நான் பிரியேன்
நல்வழி காட் டிடடி - உன்றன்
நட்பொன்று போ துமடி
சொல்வது சொல் லிவிட்டேன் - பிறகு
தோழியுன் சித் தமடி

நாட்டவர்க் கஞ் சுதியோ? உலகில்
நம்மைத் தடுப் பவர் யார்?
காட்டுப் புலி யடிநான் - போரில்
காத்திடு வேன் உனையே
வாட்டம் தவிர்ந் திடடி - கொடிய
வாளுக்கும் அஞ் சுகிலேன்
கோட்டை மதி லகத்தோர் - முழக்கும்
கொட்டுக்கும் அஞ் சுகிலேன்

காதல் உல கினிலே - அகப்பொருள்
காவின் நடு வினிலே
மேதைகள் ஆக் கியதோர் - மாளிகை
மீதினில் நா மிருப்போம்
மாதுநீ யா ழெடுத்தே - இசை
மாரி பொழிந் திடுவாய்
காதற் களி யினில்நான் - பற்பல
காவியம் பா டிடுவேன்

(காவியப் பாவை)

## 43. தமிழ் – என் மனைவி

வெள்ளி நிலா வினிலே - ஒரு
வெட்ட வெளி தனிலே
அள்ளி அணைத் தசுகம் - அதனால்
ஆவி சிலிர்த் ததடி

சிந்தா மணி தவழும் - மார்பில்
சேர்ந்து திளைத் தசுகம்
எந்த விதம் உரைப்பேன் - எழுதி
ஏட்டினில் காட் டுவதோ?

நற்றினை ஐங் குறுநூ-றகமும்
நல்ல குறுந் தொகையும்
உற்ற கலித் தொகையும் - தமிழே
ஊட்டி மகிழ வைத்தாய்

மேவித் தழு வுவதற்கே - உன்மணி
மேகலை பற் றுகையில்
நீவிட் டகன் றுவிடின் - பிரிவு
நெஞ்சைத் துளைக் குமடி

வந்த வடக்குத் தெரு - மகள்பால்
வாஞ்சை என் றெண் ணினையோ
அந்தப் பொது மகளைத் - தொடவும்
ஆசையொன் றில் லையடி

வாழ்வு வளம் இழந்தாள் - வடக்கில்
வாடகை வீடு டையாள்
சூழ்வினை ஒன் றுடையாள் - வலையில்
சொக்கிவிட் டேன் எனவோ

ஊடிப் புலந் துநின்றாய் என்றன்
உள்ளம் அறிந் திலையோ?
நாடித் திரி பவனோ - வஞ்சக
நங்கையின் கா தலுக்கே

மேலைத் திசை யுடையாள் - ஒருத்தி
    மேன்மைக் குண முடையாள்
வாலைக் கும ரியுடன் - நண்பாய்
    வாய்மொழி பே சிடுவேன்

நெஞ்சிற் கெடு தியில்லை - அவளால்
    நேர்வது நன் மையடி
வஞ்சிக் கொடி யிடையே புலவி
    வாட்டந் தவிர்ந் திடடி

நெஞ்சத் தடந் தனில்நீ - உலவும்
    நீள்சிறை அன் னமடி
வஞ்சனை இல் லையடி - நீயே
    வாழ்க்கைத் துணை வியடி

பேதை மனக் குயிலே - உன்னைப்
    பெற்றவள் இல் லையடி
ஏதுக் கடி புலவி - தமிழே
    என்னைவிட் டெங் ககல்வாய்?

காலில் சிலம் பொலிக்க - வருவாய்
    காதல் மது பருகிக்
கோலப் பெரு வெளியில் - கவிவெறி
    கொண்டு திரி வமடி

சோலை வெளியிடையே - நாம்
    சுற்றித் திரி வமடி
மாலை நிலா வரவே - தனியாய்
    மாடந் தனை யடைவோம்

அங்குநம் கூட்டுறவால் - பிறந்த
    அன்புக் குழந் தைகளை
சங்கக் கவிதை என்றே - உலகம்
    சாற்றிப் புக ழுமடி

[காவியப் பாவை]

---

(இப்பாடல் இந்திய தேசியப் புத்தகக் குழுவினரால் (National Book Trust, India) ஆங்கிலத்திலும், இந்தியிலும்மொழி பெயர்க்கப்பட்டுள்ளது)

# 44. தமிழ் – என் மகன்

பிள்ளைக் கலிதனைத் தீர்க்கவந்தாய் - அன்புப்
பெட்டக மேஇன்பம் சேர்க்க வந்தாய்
உள்ளக் கவலைகள் ஓட்டவந்தாய் என்றன்
ஓவிய மேபுகழ்க் காவியமே

கொஞ்சுங் கனியிதழ் நீதிறந்தால் - உள்ளம்
கொள்ளைகொள் ளுங்களி கூடுதடா
விஞ்சு நலந்தரு யாழுடனே - குழல்
வேண்டுகி லேன்தமிழ் மாமகனே

பைந்தளிர் மேனியைத் தீண்டுகையில் - தமிழ்ப்
பாலக னேநடை காணுகையில்
பைந்தமி ழேஎன நின்பெயரைச் - சொல்லிப்
பாடிப் புகழ்ந்துனைப் பேசுகையில்

நின்மொழி என்செவி சேருகையில் - நெஞ்சில்
நேரும் மகிழ்வினை யாதுரைப்பேன்
என்னுயிர் மூச்சென ஆனவனே - எனக்
கேதுக்கடா அந்த மேலுலகம்

வீதி களில்விளை யாடுகையில் - என்றன்
வேதனை யாவுமே ஓடிடினும்
தீது புகுந்து விளைந்திடுமோ - என்று
செந்தமி ழேமனம் அஞ்சுகிறேன்

கெட்ட மொழியினைப் பேசுவது - மிகக்
கேடு தருஞ்செயல் விட்டுவிடு
சிட்டு நிகர்த்திடும் என்மகனே - வரும்
சின்ன மொழியையும் தள்ளிவிடு

சாதி சமயங்கள் என்பவரை - நண்பிற்
சார்ந்து பழகுதல் தீமையடா
ஓதிய சங்கத்தில் உள்ளவரே - நம்மை
ஓம்பி வளர்த்திடும் நல்லவராம்

உன்னைச் சிறியவர் ஏசுகையில் - பெற்ற
உள்ளம் கொதிப்பதை யாரறிவார்?
முன்னைப் பெருமைகள் அத்தனையும் கொண்டு
முன்னேறிச் செல்லுதல் வேண்டுமடா

முற்றவும் உன்திறம் ஆய்ந்துணர்ந்தே - இன்பம்
மூழ்கித் திளைப்பவ ளாயிடினும்
பெற்ற பொழுதினும் நான்மகிழ்ந்தேன் - பிறர்
பேசிப் புகழ்ந்துனைப் போற்றுகையில்

வந்தவள் காதலில் சிக்கியதால் - தந்தை
வாழ்வில் மனங்கொளும் பான்மையின்றி
நொந்திடச் செய்தனர் ஆயினுமே - நன்னூல்
நூற்று வளர்த்திடு வேன்உனையே

நின்னைப் பெறுவதற் கென்னதவம்- செய்தேன்
நேரினில் உன்னடை கண்டவர்கள்
என்னைஓர் தக்கவள் என்றுரைத்தார் - புகழ்
ஏற்றிட வந்தனை வாழியவே

(காவியப்பாவை)

# 45. தமிழ் – என் தாய்

செந்தமிழ் என் பவளாம் - நல்ல
செல்வக் குடி மகளாம்
முந்தை மொழி களிலே - அவளும்
மூத்தவ ளாய்ப் பிறந்தாள்
முந்திய மூ வரசர் - அவையில்
மொய்ம்புறத் தான் வளர்ந்தாள்
வந்தவர் யா வருக்கும் - செல்வம்
வாரி வழங் கிடுவாள்.

தென்ற லுடன் பிறந்தாள் - நல்ல
செய்கையொன் றே யறிவாள்
என்று பிறந் தவளோ? இவள்
எத்தனை ஆண் டினளோ?
இன்றும் இள மையுடன் - அன்னை
ஏற்றம் உறப் பொலிவாள்
ஒன்றிய நான்கு பெண்கள் - பெற்ற
ஒண்டொடியா மவளே.

கன்னடத் தான் துளுவன் - மலையன்
கண்டு மொழித் தெலுங்கன்
என்னுமிந் நால் வருக்கும் - அவரை
ஈந்து மணம் முடித்தாள்

பெண்ணெடுத் தே மகிழ்ந்தோர் - என்னைப்
பெற்றவ ளைப் பகைத்தார்
நன்னடைப் போக் கிழந்தார் - அந்த
நால்வரும் நன் றிகொன்றார்.

ஈன்றெனைக் காத் தவளை - மனமே
எங்ஙனம் நான் புகழ்வேன்
சான்றவர் மெச் சிடவே - முப்பால்
தந்து வளர்த் தனள்தாய்
தோன்றுசங் கப் புலவர் - படைத்த
தொட்டிலில் ஆட் டினவள்
மூன்றர சர் கதைகள் - சொல்லி
மூள்வலி யூட் டினள்தாய்

என்றன் வய துநிலை - பருவம்
ஏற்பவை தான் உணர்ந்தே
நன்றறி வுக்கதைகள் - நகை
நாட்டும் பிற கதைகள்
ஒன்றிய வீ ரமுடன் - காதல்
ஊட்டுஞ் சுவைக் கதைகள்
மின்றளிர் மே னியினாள் - சொல்லி
மேன்மை யுறப் பணித்தாள்.

மேவுக தொண் டுளமே - என்பாள்
மேகலைக் கா தையினால்
பாவுக நீ தியென்பாள் - எங்கள்
பாண்டியன் கா தையினால்
கோவுயர் குட் டுவனால் - வீரங்
கொட்டி முழக் கிடுவாள்
பாவில் நகைச் சுவையாத் - தருவள்
பாண்டவர் காதையினால்.

வாழ வழி வகுத்த - திரு
வள்ளுவன் ரா மலிங்கம்
ஆழ நெடும் புலமைக் - கம்பன்
அவ்வை யுட னிளங்கோ
சோழரில் பாண் டியரில் - கவி
சொன்னவர் சீத் தலையான்
தோழர்கள் என் றிவர்போல் - பலரைத்
தொல்புகழ்த் தாய் கொடுத்தாள்.

தன்கடன் ஆற் றிவிட்டாள் - தமிழ்த்
தாயெனைக் காத் தமையால்
தன்கடன் போற் றுதற்கே - கவிஞன்
தந்தனன் வேற் படையே
நன்னடை நல் கினரோ - இந்த
நாட்டினை ஆள் பவரே
என்கடன் ஆற் றிடுவேன் - பகையை
எற்றி முருக் கிடுவேன்.

[காவியப் பாவை]

## 46. தமிழ் – என் தந்தை

முன்னைத் தமிழ் மொழியே! – உலகில்
மூப்பறி யா முதலே!
என்னை மகன் எனவே – புவியில்
ஏற்றமுடன் அளித்தாய்.

கற்றுத் தெளி வதற்கே – ஆசான்
கண்டு பயிற் றுவித்தாய்
முற்றும் உணர்ந் தவனாம் – அந்த
முன்னவன் வள்ளுவனாம்.

முத்தமிழ் வா ணர்கள்சூழ் – அவையில்
முந்தி யிருந் திடவே
அத்தனே என்னை யுமோர் – சான்றோன்
ஆக்கி மகிழ்ந் தனைநீ.

தூது கலம் பகமாய்ப் – பெருகும்
தோழர்கள் பற் பலராம்
தீது விளைப் பவராய் – அமையின்
செப்பித் திருத் துவைநீ.

குற்றமொன் றில் லதுவாம் – நல்ல
கோல மனை யளித்தாய்
கற்றவன் கட் டியதே – அதுதொல்
காப்பியம் என் பதுவே.

வாரி முகந் தெடுத்தே – இன்ப
வாரி திளைப் பதற்கே
நேரிய செல் வங்கள்தாம் – தொகையில்
நேடித் திரட்டி வைத்தாய்.

ஐவகைக் காப் பியமாம் - செல்வம்
ஆக்கி எனக் களித்தாய்
கைதவக் கள் வரினால் - இரண்டு
காப்பியம் கா ணுகில்லேன்.

பாட்டிசைச் செல் வங்களும் - இழந்தேன்
பட்டயம் மட் டுமுண்டு
நாட்டினில் முன் பிறந்தோர் - அயர்வால்
நானவை காண் கிலனே.

இத்தனை போய் விடினும் - இன்னும்
எட்டுத் தொகை யுடனே
பத்தெனும் பாட் டுளதாம் - ஒவ்வொன்றும்
பற்பல கோடி யன்றோ!

பாட்டுப் புறப் பொருளால் - வீரப்
பாங்கில் எனை வளர்த்தாய்
ஈட்டும் அகப் பொருளால் - காதல்
இல்லறம் கூட் டுவித்தாய்.

நின்பெயர் காத் திடுவேன் - தமிழே
நீ எனைப் பெற் றதனால்
உன்பெயர் ஓங் குதற்கே - பற்பல
ஓவியம் நான் படைப்பேன்.

(காவியப் பாவை)

---

கைதவம் - வஞ்சகம்

# 47. தமிழ் என் தெய்வம்

கோவில் எனது நெஞ்சம் - தனிலே
கூடி யருள் புரிவாய்
காவியப் பா மாலை - அணிந்தே
காத்திட வேண்டு மம்மா
நாவின் மிசை யிருப்பாய் - எனக்கு
நல்ல மனந் தருவாய்
பாவினில் சொல் லிவெல்லாம் - சத்தி
பாய்ந்து வர வேண்டும்

உன்றன் திருப் பெயரைச் - சொல்லி
ஊரினை ஏய்த் திடுவோர்
நன்றென வா ழுகின்றார் - நின்றன்
நன்மையை நா டுகிலார்
துன்றிய பண் பினரும் - உன்பால்
தூயநல் லன் பினரும்
நின்று வருந் திடவே - செய்தல்
நீதியின் பாற் படுமோ?

நெஞ்சில் உனை நினைந்தே - என்றும்
நேர்மையில் நிற் பவரை
மிஞ்சும் வறு மையினால் - துன்பம்
மேலிடச் செய் துநின்றாய்
வஞ்சனை செய் மனிதர் - அவர்க்கு
வாழ்வுகள் தந் துநின்றாய்
வஞ்சியுன் சோ தனையோ? - எங்கள்
வாழ்வெலாம் வே தனையோ?

நித்தம் உனைத் தொழுதே - எங்கும்
நின்புகழ் பா டுமெனைப்
பித்தன் வெறி யனென்றே - உலகம்
பேசுதல் காண் கிலையோ?
முத்தமிழ் தந் தபித்தால் - செல்வம்
முன்னின்று தே டுகிலேன்
இத்தரை மீ தினிலே - வறுமை
எத்தனை துன் பமம்மா!

கொல்லும் வறு மையிலும் - செம்மை
　　　　குன்றா திலங் கிடவே
வெல்லும் மன நிலையைத் - தாயே
　　　　வேண்டுகி றேன் அருள்வாய்
சொல்லுமென் பா டலினால் - உலகம்
　　　　சூழ்ந்து வணாங் கிடவே
வல்லமை வேண் டுமம்மா - என்றும்நான்
　　　　வாழ்ந்திட வேண் டுமம்மா.

[காவியப் பாவை]

## 48. சொற்றமிழ் பாடுக!

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

‘அகத்தும் பிறமொழி வெறுத்திடல் அறிகிலம்
பகுத்தறிவு வுடையோம் பண்பும் உடையோம்
வேண்டும் மொழிகளை வேண்டுவோர் பயின்றிங்
கீண்டி யுறையுநர் எண்ணிலர் அறிக!
குறுமன மென்றும் விரிமன மென்றும்
சிறுமன முடையோர் செப்புவ கொள்ளேல்!
தனியொரு மாந்தன் தன்னலம் பேணின்
முனியத் தகுமது குறுமன மாகும்;
தன்னல மறுப்பது விரிமன மாகும்,
முன்னவர் பேணிய மொழியும் நாடும்
மன்பதை முழுமைக் குரியன வன்றோ!
அன்புளங் கொண்டோர் அவற்றைப் பேணின்
தென்படும் குறைஎன்? தெளியா மாந்தர்
குறுகிய மனமெனக் குளறுவர் நம்பேல்!
பெறுபுகழ்த் தாய்மொழி பேணாஅ ராகி
வருமொழி வாழ்த்தி வரவுரை கூறுநர்
அறமன முடையரென் றறிவுளோர் பகரார்;

---

உறையுநர் – வாழ்பவர், எண்ணிலர் – கணக்கிலாதவர்,
செப்புவ – சொல்பவை, மாந்தன் – மனிதன், முனிய – வெறுக்க, பேணார் – பேணாதவர்.

பிறமொழி தீதெனப் பேசலும் அறிகிலம்
உரியநம் மொழியே உயர்வுறல் வேண்டி
இரவும் பகலும் இடரிலும் முயல்வேம்;
யாதும் ஊரெனில் எம்முடை ஊரகம்
தீதுறல் வேண்டுமோ? சீருறல் தீமையோ?
யாவரும் கேளெனில் யாயுடன் தந்தையும்
மேவருங் கேடுகள் மேவுதல் வேண்டுமோ?
அன்னவர் நலம்பெற ஆர்வம் பூணுதல்
புன்மையோ? பகையும் பூத்திடல் என்னையோ?
உலகப் புகழ்பெறு தலைவரும் கவிஞரும்
பலகற் றடங்கிய பண்புயர் மாந்தரும்
தாய்மொழி வேட்கை தணிந்திலர் துறந்திலர்;
ஆய்புலப் பாங்கினர் அறிகுவர் இதனை;
தமிழின் பகைவர் சாற்றும் மொழியினை
உமிழ்க! மெய்ம்மை உணர்க! எழுக'
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

---

யாய்-தாய், மேவரும்-விரும்பத்தகாத, புன்மையோ?-இழிவோ,
என்னயோ?-ஏனோ?, தணிந்திலர் -அடங்கினாரிலர்

கூவும் குயில்தன் குரலாற் பாடும்;
காகம் தன்குரல் கொண்டே கரையும்
இரவற் குரலைப் பெறுவது காணேம்;
பறவையின் இயல்பைப் பகுத்தறி வுளநாம்
அறிவதும் இல்லேம்; தெளிவதும் இல்லேம்;
நமக்குள மொழியை நாடுதல் தவிர்த்துப்
பிறர்க்குள மொழியாற் பிதற்றுதல் உடையேம்;
உருகும் இசையால் உள்ளம் என்றீர்!
பொருளும் உணரப் புரியும் மொழியால்
மருவிய பாடல் வழங்கும் இனிமையை
ஒருமுறை எண்ணுக! ஊனும் உயிரும்
நெஞ்சுடன் கலந்து நெக்குநெக் குருகி
விஞ்சுபே ரின்ப விளைவினில் திளைக்கும்
குழல்தரு மிசையில் மொழியிலை என்றீர்!
அழகிது நும்மொழி;அவ்விசை சாலுமேல்
மிடற்றிசை வேண்டுமோ? வெறொரு மொழியில்
தொடுத்திடும் பாடலும் தொகையுடன் பாடுவோர்
கூட்டமும் வேண்டுமோ? குழல்முத லாகக்
காட்டும் அவ்விசைக் கருவிகள் சாலுமே!

---

நெக்குநெக்குருகி–மிக இளகி, சாலுமேல் – போதுமெனில்.

தமிழ்விழை யாரும் தம்வயிற் றுணவே
அமிழ்தெனத் தேடி அலைந்துழல் வாரும்,
உரிமை வாழ்வினைக் கருதகில் லாரும்
அடிமை வாழ்வினி லமைதி கொள்வாரும்
தமிழறி வில்லாத் தமிழருந் தாமே
அயன்மொழி யிசையே அரங்கினிற் பாடுவர்
மயலுணர் வுடையீர்! மற்றொன் றறைகுவல்
எம்மொழி யாயினும் இசையினி லேற்போர்
நம்மொழி ஒதுக்குதல் நன்றுடைச் செயலோ?
ஏற்போர் ஏற்க இசையுணர் பெரியீர்!
காற்கூ றறிவாற் கழறுதல் தவிர்க!
இசைவளந் தமிழில் இலைஎனப் பிதற்றல்
வசையுமக் காகும்; வாய்மதம் ஒழிக!
முத்தமிழ் என்றொரு முறைவைப் புளதை
மெத்தவும் மறந்தீர்! மெய்ம்மையை இகழ்ந்தீர்!
நெஞ்சறி பொய்யை நிகழ்த்துதி ராயின்
பஞ்சென அதுதான் பறப்பதிங் கொருதலை;
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

---

காற்கூறு –கால்பங்கு, வாய்மதம் – வாய்ச்செருக்கு

பழியுரை நாணாப் பண்புள பெரியீர்!
மொழிவெறி எனவொரு மொழியினை மொழிந்தீர்
உரிமை விழைவது வெறியெனக் கூறும்
பெருமை நும்பால் உறைவது கண்டேன்;
நரிமனம் இஃதென நவின்றிட நாணுவல்;
வெறியுணர் வுளதேல் விளைவன வேறு!
முறையொடும் அறிவொடும் முறையிடு கின்றோம்;
நெறியறிந் தொழுகும் நேர்மையை வியந்திலீர்!
புரைபடும் நும்முளம் புலப்படச் செய்தீர்!
செந்தமிழ் மொழியொடு செற்றம் என்கொலோ?
வந்துடன் தாய்மொழி வளர்த்திடக் கூடுக!
முந்துநம் தமிழிசை மொய்ம்புறப் பாடுக!

. . . . . . . . . . . . . . . . . . . . . . .

தமிழக வரைப்பில் தாய்மொழி ஆட்சி
திகழுதல் வேண்டும்; தேவுறு கோவில்
விலக்குடைத் தன்று; மயக்குறல் என்கொல்?
கலைக்கோர் உறைவிடம் கட்டியோர் தமிழர்

உள்ளுறை கடவுளும் உரியவர் நமக்கே
அள்ளூற வணங்குவோர் அயலவர் அல்லர்
இறைவினை புரிவோர் ஏதிலர் அல்லர்
முறைஎது? வழிபடு மொழிஎது? புகல்வீர்!
முன்னோர் நெறியினில் முரண்பா டென்றீர்!
முன்னோர் யாரென முடிந்த முடிபாச்
சொன்னோர் யாரே? முன்னோர் அவரினும்
முற்பட வாழ்ந்தவர் எப்பெய ருடையார்?
அப்பெரு முன்னோர் ஆண்டவன் மாட்டுச்
செப்பிய மொழிஎது? செந்தமி ழன்றோ?
திருவாய் மொழியெனத் திருவா சகமென
இறைவா! இறைவா! என்றவர் ஓதிய
திருவாய் மொழிஎது? தீந்தமி ழன்றோ?
அவரெலாம் முன்னோ ரல்லரோ? இறைவன்
செவிதனில் அம்மொழி சேர்ந்ததும் இலையோ?
அரவணி இறைவனை ஆரூர் நம்பி
இரவிடைப் பரவைபால் ஏவிய தெம்மொழி?
இடங்க ருண்ட இளஞ்சிறு மகனை
உடம்பொடும் உயிரொடும் உய்வித்த தெம்மொழி?

---

அள்ளூற – வாயுற, ஆரூர் நம்பி – சுந்தரர், பரவை – பரவை நாச்சியார், இடங்கர் – முதலை.

ஒடுங்கிய எலும்பினை உருவெழில் குறைவிலா
மடந்தையின் வடிவா மாற்றிய தெம்மொழி?
அருமறை வினைஞரால் அடைபடு கதவம்
திருமறைக் காட்டில் திறந்ததும் எம்மொழி?
கணிகணன் முன்செல மணிவணன் அடியிணை
பணிதிரு மழிசையர் பதறினர் பின்செலப்
படப்பாய் அணைமேல் பாற்கடல் மிசையே
கிடப்போன் தன்மனைக் கிழத்தியும் உடன்வர
அரவணைச் சுருட்டோ டாங்கவர் தொடர்ந்து
பரிவுடன் ஓடப் பண்ணிய தெம்மொழி?
அம்மொழி நம்மொழி அத்துணைப் பெருமையும்
செம்மையின் எமக்கெலாம் செப்பியோர் நீவிர்
இன்றிவை மறந்தீர்! எதிர்ப்புரை கிளந்தீர்
கன்றிய மனத்தாற் கரவுரை புகன்றீர்
மந்திர வலிமை செந்தமிழ்க் கிலையெனில்
இந்தநல் லருஞ்செயல் எவ்வணம் இயலும்?
கடகரி உரியன் கடும்புலி யதளன்
சடையினை மறைத்து மணிமுடி தரித்து
விடைக்கொடி விடுத்துக் கயற்கொடி எடுத்து
விடவர வொழித்து வேம்பலர் முடித்துத்

---

கதவம்–கதவு, சுருட்டு – (படுக்கைச்) சுருள், கரவுரை – வஞ்சனை மொழி, கடகரி – மதயானை, உரியன், அதளன் – தோலாடையன், விடைக்கொடி – எருக்கொடி, வேம்பலர் – வேப்பம்பூ

தொடுகழல் மாறன் வடிவொடு வந்ததூஉம்,
மடவரல் மனையாள் மலைமகள் உமையாள்
தடாதகைப் பெயரினைத் தாங்கி வந்ததூஉம்,
மயில்மே லமர்வோன் அயில்வே லுடையோன்
எழில்சூழ் மதுரை எழில்நக ரதனுள்
உக்கிர குமர னுருவொடு வந்ததூஉம்,
தெக்கண மொழியாம் தீந்தமிழ்ச் சுவையைக்
கூட்டுண வெழுந்த வேட்கையால் என்றே
பாட்டினில் குருபரர் பாடி வைத்தனர்;
வடக்கினில் நின்றோன் வரன்முறை யாகக்
கடுக்கவின் கண்டன் தென்றிசை நோக்கி
அடுக்க வந்துவந் தாடுதல் ஏனெனின்
தொடுக்கும் பழந்தமிழ்ச் சுவையினை மாந்தவே,
அறைந்தனர் இவ்வணம் அருட்பரஞ் சோதி;
கண்ணுதற் கடவுள் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்து பசுந்தமிழ் ஆய்ந்தனன்;
வாத வூரன் ஓதிய வாசகம்
தீதுறா வண்ணம் தென்னா டுடையவன்
ஏட்டில் எழுதி நாட்டிற் களித்தனன்;

---

மாறன் – பாண்டியன், மடவரல் – இளமைமிகும், குருபரர் – குமரகுருபரர், கடுக்கவின் – நஞ்சின் அழகு, கண்டன் – கழுத்தினன். பரஞ்சோதி – திருவிளையாடற் புராண ஆசிரியர், கழகம் – தமிழ்ச்சங்கம், வாதவூரன் – மாணிக்கவாசகர்.

அர்ச்சனை பாட்டே ஆதலின் நம்மைச்
சொற்றமிழ் பாடெனச் சுந்தரன் றன்பால்
பற்றுடன் சென்று பைந்தமிழ் வேண்டினன்;
வழிபடு தமிழை விழைகுவர் இறைவரென்
றெழிலுற உணர்த்திட இவையிவை சான்றாம்;
முன்னோர் சொன்ன முடிபினைக் கொள்க!
பின்னோர் நம்மைப் பேணுதல் வேண்டும்'

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

'துறைதொறும் துறைதொறும் தூயநற் றமிழே
ஆட்சி புரியும் மாட்சிமை வேண்டும்'
'ஆட்சியின் பெயரால் அயன்மொழி புகுதலைச்
சான்றோர் வெறுப்பர் தமிழகம் மறுக்கும்
ஆன்றமைந் தடங்கிய அறவோர் கொதிப்பர்
ஆதலின் அரசியல் ஆயத் துள்ளீர்
மேதகு பெரியீர் ஆவன புரிக'

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

(பூங்கொடி)

('பூங்கொடி' காப்பியத்தில், 'சொற்போர் நிகழ்த்திய காதை' எனும் பகுதியிலிருந்து எடுக்கப் பெற்ற சிலவரிகள் மட்டும் இங்கு தரப்பெற்றுள்ளன.)



# நன்றிக்குவிப்பு !

எங்கள் இனிய செல்வங்கள்

**பா. ஓவியா,** M.E. - **இ. விவேக்,** M.S. (London)

மணவிழாவிற்கு
வந்து வாழ்த்திச் சிறப்பித்தமைக்கு
எங்களின் மனங்கனிந்த
நன்றி! நன்றி!!

அன்புடன்
**பா. பூங்கோதை - மு. பாரி**

வள்ளுவராண்டு 2042 மடங்கல் (ஆவணி) 15
(01-09-2011)
காரைக்குடி.